
# மகாத்மாவைக் கொண்டாடுவோம்!




Power of Trust
Power of Desire
India's Most Trusted Dhotis Brand
India's Most Desired Dhotis Brand
GITA
RAMRAJ COTTON
வேட்டி 100
22.09.1921 - 22.09.2021
மகாத்மா
அஹிம்சையின் அடையாளம்...
வேட்டி
இந்தியாவின் அடையாளம்...
RAMRAJ
COTTON
"வேட்டி எனது அடையாளம்" என்ற தங்களது வார்த்தைகளை வேதங்களாக
பின்பற்றி 40 வருடங்களாக வேட்டியை இந்தியாவின் அடையாளம் ஆக்கியது மட்டுமல்லாமல்
பல்லாயிரக்கணக்கான நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளது
"ராம்ராஜ்" என்ற பெருமையை தங்களது பொற்பாதங்களில் அர்ப்பணிக்கின்றோம்.




மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ ©
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்


# காந்தி வேட்டியின் நூற்றாண்டு!

1921 செப்டம்பர் 22. தென்னிந்தியா வந்த காந்தியை, தேசத் தந்தையாக மதுரை மக்கள் மாற்றி இந்தியாவுக்குக் கொடுத்த தினம் இது. எளிய மக்களின் வாழ்வை தரிசித்த மகாத்மா, 'இனி ஒற்றை ஆடையே உடுத்துவேன்' என முடிவெடுத்து அன்று வேட்டிக்கு மாறினார். காந்தியடிகள் வேட்டிக்கு மாறிய நூற்றாண்டை, நமது பாரம்பரியம் மற்றும் சுதேசி அடையாளங்களைக் காக்கும் ஆண்டாக ராம்ராஜ் காட்டன் கொண்டாடுகிறது.

# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

*காந்தியடிகளின் கறுப்பு வெள்ளை புகைப்படங்கள், காலத்தை உறையச் செய்து காந்தியின் உருவத்தை நமக்கு அறிமுகம் செய்கின்றன. பெரும்பாலான புகைப்படங்களில் வேட்டி மட்டுமே உடுத்தி மேல்சட்டை அணியாத ஒல்லியான தேகம், நடந்து கொண்டே இருக்கிற சித்திரம் நம் கண்முன்னே வந்துபோவதை உணர முடியும்.*


*வெளிநாட்டில் சென்று படித்து வழக்கறிஞர் பட்டம் பெறுகிற வசதியையும் வாய்ப்பையும் பெற்ற ஒரு மனிதர், 'இனி வேட்டியை மட்டுமே உடுத்துவேன். மேலாடை அணிய மாட்டேன்' என்கிற முடிவை எடுத்தது இந்திய வரலாற்றில் மிக முக்கியமான தருணம். எளிய மக்களின் பிரதிநிதியாக ஆங்கிலேய அரசாங்கத்தை எதிர்த்துப் போராடிய மகாத்மா, தன் வாழ்நாளின் இறுதி நொடி வரை ஒற்றை வேட்டி அணிந்த எளிய மனிதராகவே வாழ்ந்தார்.*

*சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரை நகருக்கு 22.09.1921 அன்று வருகை தந்த காந்தி, மேலாடை அணிய வசதி வாய்ப்பற்ற எளிய மனிதர்களைக் கண்டார். மனிதனின் அடிப்படைத் தேவையான உடைகளையே முழுமையாக உடுத்த இயலாத மக்கள் இந்தியா முழுவதும் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்தார்.*

*'அனைவருக்கும் போதுமான சுதேசி ஆடை இல்லாதபோது, நானும் வேட்டியை மட்டும் உடுத்தும் அரை ஆடை மனிதனாக வாழ்கிறேன்' என்று முடிவெடுத்து, அன்று மதுரையில் கலந்து கொண்ட கூட்டத்தில் சட்டை இல்லாமல் வேட்டி மட்டுமே அணிந்து வந்து பேசினார் காந்தி.*

*காந்தியடிகள் தான் கொண்ட கொள்கைக்கும், வாழும் வாழ்க்கைக்கும் நூல் அளவுகூட இடைவெளி இல்லாமல் வாழ்ந்த மகத்தான தலைவர். 'இப்படி உண்மையாகவும் நேர்மையாகவும் வாழ்ந்தால் வெற்றியடைய முடியாது' என்று உலகம் நம்பிக்கொண்டிருந்தபோது, 'உண்மையும் நேர்மையும் இருந்தால் நமது லட்சியங்களை உறுதியாக வென்றெடுக்க முடியும்' என்பதை நம் கண் முன்னே வார்த்தையாக சொல்லாமல், வாழ்க்கையாக வாழ்ந்து காட்டிய காரணத்தால் மக்களின் மனதில் மகாத்மாவாக நிலைத்து நிற்கிறார்.*

*காந்தியடிகளின் கருத்துகளை அனைவரிடமும் கொண்டு சேர்ப்பதை வாழ்வின் நோக்கமாகக் கொண்டவரும், தேசிய காந்திய அருங்காட்சியகத்தின் பொறுப்பாளருமான அண்ணாமலை அவர்கள் காந்தியைப் பற்றி குறிப்பிட்டது நினைவுக்கு வருகிறது. "நமது நண்பர்கள், உறவினர்கள், நம்மை ஆளும் தலைவர்கள் நமக்கு உண்மையானவர்களாக, நேர்மையானவர்களாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறோம். ஒருவரை*



வேலைக்கு எடுக்கும்போது ‘இவர் நமது நிறுவனத்துக்கு உண்மையுடன் இருப்பாரா’ என்று பரிசோதிக்கிறோம். ஆனால், உண்மையின் பக்கம் நிற்க வேண்டிய தருணம் வரும்போது மட்டும் ‘இந்தக் காலத்தில் உண்மையாக வாழ்ந்தால் பிழைக்க முடியாது’ என்று பலரும் சொல்கிறார்கள். காந்தியும், அவரைப் பின்தொடர்ந்த பல லட்சம் தொண்டர்களும் உண்மையின் பக்கம் நின்று நிறைவான வாழ்வை வாழ்ந்திருக்கிறார்கள். ‘உண்மையாகவும் நேர்மையாக வாழ்வது வாழ்வில் வெற்றியடைய சிறந்த வழி’ என்பதை காந்தியம் நிரூபித்துள்ளது” என்கிறார் காந்திய தொண்டர் அண்ணாமலை.

வேட்டியை சுதந்திரப் போராட்டத்தின் ஆயுதமாக உருவாக்கி, ‘அரை ஆடை மனிதராக’ காந்தியடிகள் மாறிய நெகிழ வைக்கும் வரலாற்றுத் தருணத்தின் நூற்றாண்டு இது. உலகத் தலைவர்களைச் சந்திக்கும்போதும் வேட்டி மட்டுமே உடுத்திய காந்தியடிகளையும், அவரின் உண்மையான வாழ்வையும் ராம்ராஜ் காட்டன் நிறுவனம் போற்றி வணங்குகிறது.

இந்திய மக்களிடம் சுதந்திர உணர்வையும், சுதேசி உணர்வையும் தட்டி எழுப்ப தவவாழ்வு மேற்கொண்ட காந்தியடிகளின் சில நற்சிந்தனைகளை அனைவரோடும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்கிற எண்ணத்தின் வெளிப்பாடே இந்த சிறிய புத்தகம். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளில் வாடிக்கையாளர்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் காந்திய சிந்தனைகளைக் கொண்டு சேர்க்க உறுதி ஏற்கிறது ராம்ராஜ் காட்டன் நிறுவனம்.

நமது பாரம்பரிய உடையான வேட்டியை, காலத்திற்கேற்ற புதுமைகளோடு நாடு முழுவதும் கொண்டு சேர்த்த ராம்ராஜ் காட்டன், மகாத்மா காந்தி வேட்டிக்கு மாறிய நூற்றாண்டைக் கொண்டாடுவதில் பெருமிதம் கொள்கிறது.

***வாழ்க காந்தியம்... வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!***

**கே.ஆர்.நாகராஜன்**

**நிறுவனர் - ராம்ராஜ் காட்டன்**



# காந்தியின் ஆயுதம் வேட்டி!

மகாத்மா காந்தி லண்டன் சென்று சட்டம் படித்தபோதும், தென் ஆப்ரிக்காவில் வழக்கறிஞராக தொழில் செய்தபோதும், அங்கு வெள்ளையர்களுக்கு எதிராகப் போராடியபோதும் ஆங்கிலேயர்களைப் போலவே கோட்–சூட் அணிந்திருந்தார். இந்தியா வந்த பிறகு கத்தியவார் பிரதேச குஜராத்திகள் போல உடை உடுத்தினார். அவரை வேட்டிக்கு மாற்றியது தென்னிந்தியா.

லட்சக்கணக்கான நெசவுத் தொழிலாளர்களின் வாழ்வாதாரமாக இருக்கும் வேட்டியை வெறும் ஆடையாக மட்டும் பார்க்க முடியாது. சுதந்திரப் போராட்ட காலத்தில் 'கதர் ஆடை' ஓர் ஆயுதம். 'முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும்' எனச் சொல்வார்கள். அப்படி வெள்ளைக்காரர்களை எதிர்த்துப் போராட, அந்நிய உடைகளைப் புறக்கணிக்க, தும்பைப்பூ போன்ற வெண்மை நிறக் கதராடைகளை கைராட்டையில் நெய்து, நாடே தன் எதிர்ப்பைத் தெரிவித்தது. வேட்டியையே மகாத்மா காந்தி சுதந்திரப் போராட்டத்தின் ஆயுதமாக மாற்றினார்.

இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்குவது பற்றிய வட்டமேசை மாநாட்டுக்கு வருமாறு காந்திக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. பிரிட்டிஷ் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு, பிரிட்டன் அரண்மனைக்குப் பேச்சுவார்த்தைக்குச் சென்ற முதலாவது மாமனிதர் காந்திதான். பிரிட்டிஷ் மாமன்னரைச் சந்திப்பதற்கு உடை மற்றும் நடத்தை விதிமுறைகள் உண்டு. 'மேன்மை மிக்கவர்கள் என வரையறுக்கப்பட்ட மனிதர்களை சந்திக்கும்போது, இப்படித்தான் உடை அணிய வேண்டும்' என்கிற மேற்கத்திய கலாசாரத்தை முறித்துப் போட்டவர் காந்தி. லண்டன் கிளம்புவதற்கு முன்பு காந்தியிடம், "நீங்கள் மாமன்னரைச் சந்திக்கும்போது உடைகளில் மாற்றம் செய்வீர்களா? இந்த உடையில் செல்வது அவரை அவமதிப்பதாக ஆகாதா?" என்று கேட்டார். காந்தி அதற்கு, "வேறு உடையில் சென்றால், அதுதான் மன்னரை அவமதிப்பதாக ஆகும். ஏனென்றால் அந்த உடைகள் எனக்குப் பொருத்தமற்றவையாக இருக்கும்" என்றார்.

லண்டனில் கப்பலிலிருந்து இறங்கும்போதும் வேட்டியுடனும், மூங்கில் கைத்தடியுடனும்தான் இருந்தார். பிரிட்டிஷ் பிரதமருடனும் வைஸ்ராயுடனும் பேச்சுவார்த்தை நடத்த அரண்மனைக்குள்ளேயே காந்தியடிகள் வேட்டியுடன்தான் நுழைந்தார். இதனால் கோபமடைந்த பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் காந்திக்கு சூட்டிய பட்டப் பெயர்தான் 'அரை நிர்வாணப் பக்கிரி'.



ஆனால், காந்தி கோபம் கொள்ளவில்லை. மன்னருடன் சந்திப்பு முடிந்தபின் காந்தியிடம் ஒரு பத்திரிகையாளர், "மன்னர் முன் இந்த எளிய உடையில் நிற்பதற்கு உங்களுக்குக் கூச்சமாக இல்லையா?" என்று கேட்டார். "நான் ஏன் கூச்சப்படவேண்டும்? எங்கள் இருவருக்கும் தேவையான அளவு உடையை மன்னரே அணிந்திருந்தாரே" என்று சொல்லி சிரித்தார் காந்தி.

தன் உடை மூலமும், பிரிட்டிஷ் மன்னரைப் பார்த்தபிறகு சொன்ன வார்த்தைகள் மூலமும், இந்தியாவின் நிலையை உலகத்துக்கு உணர்த்தினார் காந்தி. கோடிக்கணக்கான இந்திய மக்களின் பிரதிநிதியாக லண்டன் சென்ற அவர், இந்தியர்கள் எவ்வளவு ஏழ்மையில் இருக்கிறார்கள் என்பதை தனது உடைகள் மூலம் உணர்த்தினார். பிரிட்டிஷ் அரசு இந்தியாவை சுரண்டி ஏழ்மையில் தள்ளியதால், இந்தியர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதைத் தன் தோற்றத்தில் காட்டினார் காந்தி. 'தனக்கும் சேர்த்து மன்னர் உடை அணிந்திருக்கிறார்' என்று சொன்னதன் மூலம், 'இந்தியர்களின் செல்வத்தைச் சுரண்டியே பிரிட்டன் கொழித்திருக்கிறது' என்பதை உணர்த்தினார்.

தனது உறுதிப்படி வாழ்நாள் முழுக்க வேட்டியில் உலா வந்த காந்தி, 1948ம் ஆண்டு ஜனவரி 30ம் தேதி பிரார்த்தனைக் கூட்டத்துக்குச் செல்லும்போது சுடப்பட்டு இறந்தார். அப்போது அவர் அணிந்திருந்த வேட்டி முழுக்க ரத்தம் தோய்ந்தது. மகாத்மா வேட்டிக்கு மாறிய மண் என்பதன் அடையாளமாக, மதுரை நகரில் இருக்கும் தமுக்கம் அரண்மனை இப்போது காந்தி மியூசியமாக செயல்படுகிறது. சுடப்பட்டு இறந்தபோது காந்தி அணிந்திருந்த அந்த ரத்தம் தோய்ந்த வேட்டி, ஒரு மகத்தான பொக்கிஷமாக இங்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது. நம் பாரம்பரியத்தை நேசிப்பவர்கள் மட்டுமின்றி, வெளிநாட்டவர்களும் வந்து இதைப் பார்க்கின்றனர்.



# எதைக் கற்றுக்கொள்கிறோம்?

பிறக்கும்போது எல்லோருமே நல்லவர்கள்தான். இளம் வயதில் வாழ்வில் நடைபெறும் நிகழ்ச்சிகள்தான் பசுமரத்தாணி போல மனதில் பதிந்து ஒருவரை செதுக்குகின்றன. அந்த சம்பவங்களில் கற்றுக் கொள்ளும் பாடங்கள்தான் வாழ்வின் போக்கை நிர்ணயிக்கின்றன. ஒருவர் சாதனையாளர் ஆவதும், சோர்ந்து ஒதுங்குவதும், அரிதாக சிலர் மகத்தான மனிதர்கள் ஆவதும் இந்த சம்பவங்களின் தாக்கத்தால் நிகழ்வதே! எல்லோரையும் போல மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியாகப் பிறந்தவரை, நம் தேசமே தந்தையாகக் கருதும் 'மகாத்மா' ஆக்கிய மூன்று சம்பவங்கள் பல. அவற்றில் ஒன்று பற்றி அவரே விவரிக்கிறார்...

'எனக்குச் சுமார் ஏழு வயது இருக்கலாம். என் தந்தையார் எங்கள் சொந்த ஊரான போர்பந்தரிலிருந்து ராஜ்கோட்டுக்குச் சென்றார். அங்கே என்னை ஓர் ஆரம்பப் பாடசாலையில் சேர்த்தார்கள். அந்த நாட்களில் எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த ஆசிரியர்களின் பெயர் உட்பட எல்லா விவரங்களுமே எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கின்றன. போர்பந்தரில் இருந்ததைப் போன்றே இங்கும் என்னுடைய படிப்பைப் பற்றி முக்கியமாகக் குறிப்பிடக்கூடியது எதுவுமில்லை. நடுத்தர மாணவனாகவே இருந்தேன். இந்தப் பள்ளிக்கூடத்திலிருந்து நகரை அடுத்திருந்த ஒரு பள்ளிக்கு என்னை அனுப்பினார்கள்.

12 வயதாகியபோது என்னை உயர்தரப் பள்ளியில் சேர்த்தனர். இந்தக் குறுகிய காலத்தில் என் ஆசிரியர்களிடமோ, என் பள்ளி நண்பர்களிடமோ ஒரு பொய்யேனும் எப்பொழுதும் நான் சொன்னதாக எனக்கு ஞாபகமில்லை.

எனக்குக் கூச்சம் அதிகம், யாருடனும் சேரமாட்டேன். என் புத்தகங்களும் என் பாடங்களுமே எனக்கு உற்ற தோழர்கள். சரியான நேரத்தில் பள்ளிக்கூடத்துக்குப் போய்விடுவது, பள்ளிக்கூடம் விட்டதும் வீட்டுக்கு ஓடிவந்துவிடுவது... இதுவே எனது அன்றாடப் பழக்கம். யாருடனும்

பேசவே பிடிக்காது என்பதால், உண்மையில் ஓட்டமாகத்தான் வீடுவந்து சேருவேன். இல்லாவிட்டால் வழியில் யாராவது என்னைக் கேலி செய்து விடுவார்களோ என்று பயம்.



உயர்தரப்பள்ளியில் படித்த முதல் ஆண்டில் தேர்வின்போது ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அதை நிச்சயம் நான் குறிப்பிட வேண்டும். கல்வித் துறையைச் சேர்ந்த ஆய்வாளர் கைல்ஸ் என்ற அதிகாரி பள்ளிக்கூடத்தை சோதனை செய்வதற்காக வந்திருந்தார். எழுத்துக் கூட்டி எழுதும் பயிற்சிக்காக அவர் எங்களுக்கு ஐந்து சொற்களைக்கூறி அவற்றை எழுதச் சொன்னார். அதில் ஒரு சொல் 'கெட்டில்' (Kettle). அதை நான் தவறாக எழுதிவிட்டேன். எங்கள் ஆசிரியர் தம் கால் பூட்ஸ் முனையால் என் காலைச் சீண்டித் தூண்டினார். நான் புரிந்து கொள்ளவில்லை. என் பக்கத்தில் அமர்ந்திருக்கும் பையனின் சிலேட்டைப் பார்த்து அந்த வார்த்தையின் எழுத்துகளைக் காப்பியடிக்க அவர் என்னைத் தூண்டுகிறார் என்பதை நான் அறியவில்லை. நாங்கள் பக்கத்துப் பையனைப் பார்த்துக் காப்பி அடிக்காமல் கண்காணிப்பதற்காகவே ஆசிரியர் அங்கே இருக்கிறார் என்று நான் எண்ணிக் கொண்டிருந்தேன். இதன் பலன் என்னவெனில், என்னைத் தவிர மற்ற எல்லாப் பிள்ளைகளும் அந்த வார்த்தையை சரியாக எழுதியிருந்தனர். நான் ஒருவனே முட்டாளாக இருந்து விட்டேன். இந்த முட்டாள்தனத்தை நான் உணரும்படி செய்வதற்கு ஆசிரியர் பிறகும் முயற்சி செய்தார். ஆனால் அதனாலும் பயனில்லை. காப்பி அடிக்கும் வித்தையை நான் என்றுமே கற்றுக்கொள்ள முடியவில்லை.

என்றாலும் என் ஆசிரியரிடம் நான் கொண்டிருந்த மதிப்பை இச்சம்பவம் கொஞ்சமும் குறைத்துவிடவில்லை. பெரியவர்களிடம் இருக்கும் குறைகளைக் காண்பதில் குருடனாகவே இருந்துவிடுவது எனது சுபாவம். இதே ஆசிரியரிடம் வேறு பல குறைபாடுகளையும் பின்னால் நான் அறிய நேரிட்டது. என்றாலும், அவரிடம் நான் வைத்திருந்த மதிப்பு மட்டும் குறையவே இல்லை. ஏனெனில், பெரியவர்களின் கட்டளைகளை நிறைவேற்றிவிட்டு, அவர்களுடைய செய்கைகளைக் கவனிக்காமல் இருந்துவிட நான் கற்றுக் கொண்டிருந்தேன்' என்று தன் சுயசரிதையில் எழுதியிருக்கிறார் காந்தி.

பள்ளியில் சராசரி மாணவனாக இருந்தபோதும், தேசம் நேசிக்கும் தலைவராக காந்தியால் ஆக முடிந்தது. காரணம், அவர் சத்தியத்தின் பக்கம் நின்றதும், பெரியோரை மதித்ததும்! அவரிடமிருந்து நாம் எதைக் கற்றுக்கொள்கிறோம் என்பது முக்கியம்.




# காந்தியும் கடவுளும்!

சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்ஜியத்தை ஆண்டுவந்த பிரிட்டிஷ்காரர்களை அச்சமின்றி எதிர்த்தவர் மகாத்மா. ஆனால், சிறுவனாக இருந்தபோது காந்திக்கு பயம் அதிகம். பாம்பு பயமும் திருடர் பயமும் நிறைய. இருட்டைக் கண்டாலே நடுங்குவார். இருட்டில் கண்களை மூடினால் பிசாசுகள் வந்து சூழ்ந்து கொள்வதாகவும் நினைத்து நடுங்குவார்.

காந்திக்கு தாய் புட்லி பாயின் பக்தியும் தெய்வ நம்பிக்கையும் கண்டு வியப்பு ஏற்பட்டது. தாயோடு அவர் கோயில்களுக்குச் செல்வதுண்டு. ஆனால் அவரின் இளம் உள்ளத்தில் பக்திப் பயிரை விளைவித்தவர், அவரது வீட்டில் வேலை செய்து வந்த அரம்பை என்ற பெண்மணியே.

காந்திஜியை வளர்த்த செவிலித்தாயாகவும் இருந்தவர் அரம்பை. காந்தியின் பயங்களைப் போக்க அரம்பை பாடுபட்டார்.

ஒருநாள் காந்தி தன் வீட்டுக்குள் ஒரு இருட்டறையில் தனியாகச் செல்வதற்குப் பயந்தார். ‘‘ஒன்றும் பயமில்லை,போ” என்றனர் சகோதரர்கள். ஆனால் காந்தி பயத்தோடு போகாமல் நின்றிருந்தார். அரம்பை அருகில் வந்தார். “மோகன்தாஸ், உனக்கு பயம் ஏற்படும்போதெல்லாம் ‘ராம்... ராம்...’ என்று சொல். அந்த ராம நாமம் உன் பயத்தைப் போக்கிவிடும்” என்றார்.



அவர் இப்படிச் சொன்னதும், காந்திக்கு நம்பிக்கை ஏற்பட்டது. ‘ராம்... ராம்...’ என்று கூறிக் கொண்டே இருட்டறைக்குள் சென்றார். பயம் மெல்ல மெல்ல அவரை விட்டு அகன்றது. அன்றுமுதல் காந்தி ராம நாம ஜெபம் செய்யத் துவங்கினார்.

மகாத்மா அதிகம் கோயிலுக்குப் போனதோ சாமியார்களை தரிசித்ததோ இல்லை. ஆனால் அவரது இறை நம்பிக்கை எவருடையதை விடவும் குறைந்ததில்லை. எல்லா மதங்களையும் இணைக்கும் கூட்டு வழிபாட்டை அவர் வலியுறுத்தினார். வாழ்நாள் முழுக்க அவர் நிகழ்த்தியதும், சுட்டுக்கொல்லப்பட்ட தினத்தன்று அவர் பங்குபெற விரைந்ததும் அப்படிப்பட்ட ஒரு பிரார்த்தனைதான். அவரின் பிரார்த்தனைகளில் 'ரகுபதி ராகவ ராஜாராம்' என்ற பாடல் தவறாமல் இடம்பெறும். முக்கியமான தருணங்களில் அவர் 'ஹே ராம்' என்று சொல்லத் தவறுவதில்லை.

கடவுளையும் சத்தியத்தையும் அவர் இணைத்துப் பார்த்தார். 'கடவுளிடம் நம்பிக்கை வைத்திருப்பதால்தான் நான் வாழ முடிகிறது. என்னுடைய கருத்தில் சத்தியத்திலிருந்து வேறாக கடவுள் ஒன்றுமில்லை. சத்தியமே கடவுள். இந்த உலகமே மறுத்தாலும் கடவுள் இருக்கத்தான் செய்கிறார்; அதுபோலத்தான் உண்மையும். அதற்கு ஆதரவு இல்லையென்றாலும் அது நீடித்திருக்கவே செய்யும். உண்மை மற்றும் அகிம்சையின் வழியேதான் கடவுளைப் பார்க்க முடியும். அவை இரண்டும்தான் என் கடவுள். அவை, ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போன்றவை' என்றார் அவர்.

இறைவனை உணர்வதற்கான வழியையும் மகாத்மா காட்டுகிறார். 'ஒரு மனிதன் விருப்பு வெறுப்புகளிலிருந்து முற்றிலுமாக விடுதலை பெறும்போதுதான் இறைவனை உணர்கிறான். வேறு வகையில் உணர்வதிற்கில்லை. கடவுள் நம்மையெல்லாம் கவனித்துக் கொண்டிருக்கிறார். தண்டிப்பதற்காக அல்ல, திருத்துவதற்காகவே கவனிக்கிறார். கடவுளிடம் நமக்கு நம்பிக்கை இருந்தால், வாசலில் நம்பிக்கையான காவல்காரன் இருக்கும்போது நாம் கவலையின்றி இருப்பது போலவே இருக்க வேண்டும். ஒருபோதும் தவறாதவரான கடவுளைவிட நமக்கு நல்ல வாயில் காப்போன் வேறு யார் இருக்க முடியும்?' என்றார் மகாத்மா.

தெய்வ நிந்தனை கூடாது என்பதையும் அவர் வலியுறுத்தினார். 'கடவுள் எல்லோரையும் பாதுகாப்பவர். இப்படிச் சொல்வதால், நம் உடமைகளை யாரும் கொள்ளையிட முடியாது என்றோ, எந்த மிருகமும் நம்மைத் தாக்காதோ என்று பொருள் அல்ல. அப்படி ஏதேனும் நடந்தால், அது கடவுளின் பாதுகாப்புக்கு இழுக்கு அல்ல; அவரிடம் நமக்கு நம்பிக்கை இல்லாததுதான் காரணமாக இருக்க முடியும். நதி எப்போதும் எல்லோருக்கும் நீர் வழங்கத் தயாராக உள்ளது. ஆனால் ஒருவன் தண்ணீர் நிறைக்க பானை எடுத்துக்கொண்டு ஆற்றுக்குச் செல்லவில்லை என்றால் அது எப்படி ஆற்றின் பிழையாகும்?' என்று கேட்டார் காந்தி.

பக்தி எப்படி இருக்க வேண்டும்? 'தினந்தோறும் புதுப்புது பொருட்களையும் செல்வத்தையும் சேர்ப்பதுதான் கடமை என்று இருக்கக்கூடாது. படைத்தவனைப் பாராட்டுவதும் அவனைப் பார்க்க விரும்புவதும்தான் கடமையாகக் கொள்ள வேண்டும்' என்பது மகாத்மா சொல்லும் மார்க்கம்.




# காந்தியை மாற்றிய கதைகள்!

எந்த சூழலிலும் உண்மை பேசுவதும், பெரியோரையும் பெற்றோரையும் மதித்து அன்பு செலுத்துவதும் மகாத்மா கற்றுத் தந்த அடிப்படைப் பாடங்கள். பள்ளி வயதிலேயே இதையெல்லாம் அவர் கற்றுக்கொள்ள காரணமாக அமைந்தது இரண்டு சம்பவங்கள். தன் வாழ்க்கை வரலாறான 'சத்திய சோதனை' நூலில் அவர் இதைக் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தைகள் தங்கள் பாடப் புத்தகங்களைத் தாண்டி வேறு புத்தகங்கள் எதையேனும் படித்தால் பல பெற்றோர்கள் அதிர்ச்சி அடைகின்றனர். அப்படிப் படிக்க விடாமல் தடுக்கின்றனர். நல்ல கருத்துகளைச் சொல்லும் காட்சிகளையும் குழந்தைகள் பார்க்க முடிவதில்லை. இவைதான் அவர்களின் குணங்களைச் செதுக்குகின்றன என்று தன் வாழ்க்கையின் வழியே சொல்கிறார் மகாத்மா.

'என் பாடப் புத்தகங்களைத் தவிர வேறு எதையும் படிப்பதில் எனக்குப் பொதுவாக விருப்பம் இருந்ததில்லை. அன்றாடம் பாடங்களைச் சரிவரப் படித்து விட வேண்டும் என்று உறுதியாக இருப்பேன். ஏனெனில், சரியாகப் படிக்காததற்காக ஆசிரியரின் கண்டன தண்டனைகளுக்கு ஆளாவது எனக்குப் பிடிக்காது. அதுமட்டுமில்லை, ஆசிரியரை ஏமாற்றவும் நான் விரும்பவில்லை. பாடங்களைப் படிக்கவே நேரம் சரியாக இருக்கும்போது மேற்கொண்டு வேறு புத்தகங்களைப் படிப்பது என்பதற்கே இடமில்லை' என்று குறிப்பிடுகிறார் மகாத்மா.

என்றாலும், ஒரு நூல் மகாத்மாவைக் கவர்ந்தது. காந்தியின் அப்பா கரம்சந்த் காந்தியிடம் 'சிரவணபித்ரு பக்தி நாடகம்' என்னும் நூல் இருந்தது. அது இளம் காந்தியை மிகவும் கவர்ந்தது. புத்தகத்தை அவர் பலமுறை படித்தார். அச்சமயத்தில் படக்காட்சி நடத்துபவர்கள் சிலர் ராஜ்காட்டிற்கு வந்தார்கள். சிரவணபித்ரு பக்தி நாடகக் காட்சிகளைப் படமாக்கிக் காட்டினர். பார்வை இழந்த தாய், தந்தையரை, சிரவணன் காவடியில்



வைத்துக்கொண்டு தூக்கிச் செல்வதை இளம் காந்தி படக்காட்சியாகப் பார்த்தார். அக்காட்சி அவர் மனத்தை விட்டு அகலவே இல்லை. அந்திமக் காலத்தில் பெற்றோரை எப்படி அக்கறையோடு கவனித்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு சிரவணனின் கதை அவருக்கு ஒரு முன்னுதாரணமாக அமைந்தது.

அந்த சமயத்தில் ஒரு நாடகக் கம்பெனி காந்தியின் ஊரில் அரிச்சந்திர நாடகத்தை நடத்தியது. தந்தையிடம் அனுமதி பெற்று இந்த நாடகத்தைக் காணச் சென்றார் காந்தி. அரிச்சந்திரனின் சத்தியம் தவறாத வாழ்வு அவர் மனதை உருகச் செய்தது. சத்தியத்தின் பாதையில் சென்றதால் அரிச்சந்திரன் அடைந்த துன்பங்களையும், அத்தனை துயரங்களையும் தாங்கிக் கொண்டு அவர் சத்தியம் தவறாமல் வாழ்ந்ததையும் கண்டு காந்தி மனம் உருகினார்.

தன் சுயசரிதையில் அதுபற்றி எழுதியிருக்கிறார். 'எண்ணற்ற சமயங்களில் எனக்குள் நானே அரிச்சந்திரனாக நடித்திருப்பேன். அரிச்சந்திரனைப் போல எல்லோரும் ஏன் சத்தியசீலர்கள் ஆகக்கூடாது என்று அல்லும் பகலும் என்னை நானே கேட்டுக்கொள்வேன். சத்தியத்தைக் கடைபிடிப்பதும், அதற்காக அரிச்சந்திரன் அனுபவித்த துன்பங்களையெல்லாம் அனுபவிப்பதுமாகிய லட்சியமே ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கியது. அரிச்சந்திரனின் கதையை நினைத்து பல சமயங்களில் அழுதும் விடுவேன். அரிச்சந்திரன் சரித்திர புருஷனாக இருந்திருக்க முடியாது என்று என் பகுத்தறிவு இன்று எனக்குக் கூறுகிறது. என்றாலும், என்னைப் பொறுத்தவரையில் அரிச்சந்திரனும், சிரவணனும் வாழ்வின் உண்மைகள்' என்று குறிப்பிடுகிறார் மகாத்மா.

சிரவணன் கதையும் அரிச்சந்திரன் கதையும் காந்தியின் மனசாட்சிகளாக இருந்து அவரை வழிநடத்தின. எதிர்கால மகாத்மாவை இளவயதிலேயே அவை செதுக்கின. 'சில நேரங்களில் ஒரு உயரிய அழைப்பிற்கு நீங்கள் செவி மடுத்திருக்க முடியும். அந்த அழைப்பின் பெயர் மனசாட்சி. அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டதற்காக நீங்கள் கொடுத்த விலை கசப்பான கண்ணீராக இருந்திருக்கும், அதற்கும் மேலானதாக இருந்திருக்கலாம். வாழ்வில் எதை அரிதாக நினைத்தீர்களோ அதைக்கூட இழந்திருக்கலாம். ஆனாலும் மனசாட்சியின் குரலுக்குப் பணியுங்கள்' என்கிறார் காந்தி.




# அன்பின் பாதையில்...

காந்தியின் இளம் வயது நண்பர் ஒருவர், சுருட்டு பிடிக்கும் வழக்கமுடையவர். அவருடன் சேர்ந்ததால் காந்திக்கும் இந்தக் கொடிய பழக்கம் தொற்றிக்கொண்டது. பிரிட்டிஷ்காரர்களைப் பார்த்து, ‘சுருட்டு பிடிப்பதே நாகரிகம்’ என்ற நினைப்பு அப்போது இந்தியாவில் வசித்த மேல்தட்டு மக்களுக்கு இருந்தது. காந்தியும் தன்னை நாகரிக இளைஞனாக காட்டிக் கொள்ள முயன்றார். கூடவே அசைவ உணவும் பழகினார்.

இதனால் காந்தியின் செலவுக்கு நிறைய பணம் தேவைப்பட்டது. கடைகளிலும் நண்பர்களிடமும் கடன் வாங்கினார். கடனை அடைப்பதற்குப் பணம் தேவைப்பட்டதும் என்ன செய்வது என்று யோசித்தார். வீட்டில் காசு திருடினார். அதுவும் போதவில்லை. அதன்பின் தனது அண்ணனின் தங்கக் காப்பிலிருந்து ஒரு பகுதியை வெட்டி எடுத்தார்.

ஆனால், ‘தான் செய்யும் செயல் எவ்வளவு கேவலமானது’ என நினைத்துப் பார்த்தபோது தாங்க முடியாத துயரம் அவர் மனதைக் கவ்வியது. ‘இக்குற்றம் என்னால் பொறுக்க முடியாததாயிற்று. இனி திருடுவதே இல்லை என்று முடிவு கட்டிக் கொண்டேன். செய்த குற்றத்தை என் தந்தையாரிடம் ஒப்புக் கொண்டு விடுவது என்றும் தீர்மானித்தேன். ஆனால், சொல்லத் துணிவு வரவில்லை. என் தந்தையார் என்னை அடிப்பார் என்று பயப்படவில்லை. எங்களில் யாரையுமே அவர் அடித்ததாக எனக்கு ஞாபகமில்லை. அவருக்கு நான் உண்டாக்கக்கூடிய மனவேதனையைக் குறித்தே அஞ்சினேன். ஆனால், எல்லாவற்றையும் அவரிடம் சொன்னால்தான் பாவம் தீரும் என்று கருதினேன்’ என தன் சுயசரிதையில் எழுதியிருக்கிறார் காந்தி.

ஒரு கடிதமாக எல்லாவற்றையும் எழுதி, ‘நான் செய்த குற்றங்களுக்குத் தகுந்த தண்டனை அளிக்க வேண்டும்’ என்று கேட்டுக் கொண்டார்.



அப்போது அவரது தந்தை கரம்சந்த் காந்தி உடல்நலமின்றி படுத்த படுக்கையாக இருந்தார். தந்தையிடம் சென்று கடிதத்தைக் கொடுத்த காந்தி, தண்டனையை எதிர்நோக்கி அருகில் நின்றிருந்தார். படுக்கையிலிருந்து எழுந்து அமர்ந்தபடி கரம்சந்த் கடிதத்தைப் படித்தார்.

'அவர் முழுவதையும் படித்தார். முத்துத் துளிகள் போல் அவர் கன்னங்களில் கண்ணீர் வழிந்து காகிதத்தை நனைத்தது. ஒரு கணம் கண்ணை மூடிக்கொண்டு சிந்தித்தார். பிறகு கடிதத்தைக் கிழித்தெறிந்தார். திரும்பவும் படுத்துக் கொண்டார். நானும் கதறி அழுதேன். என் தந்தையார் அனுபவித்த வேதனையை நான் காண முடிந்தது. முத்து போன்ற அந்த அன்புத்துளிகள் என் உள்ளத்தைச் சுத்தப்படுத்தி, என் பாவத்தையும் அலம்பிவிட்டன. அத்தகைய அன்பை அனுபவித்தவர்கள் மட்டுமே, அது இன்னது என்பதை அறிய முடியும். இதில் தந்தையின் அன்பைத் தவிர வேறு எதையும் நான் அப்பொழுது காணவில்லை. ஆனால் இன்றோ, அதுதான் சுத்தமான அகிம்சை என்று அறிகிறேன். அத்தகைய அகிம்சை எல்லாவற்றிலும் பரவி விடும்போது. அது தொட்டதையெல்லாம் தன்மயமாக்கி விடுகிறது. அதனுடைய சக்திக்கு எல்லையே இல்லை' என்றார் காந்தி.

'தங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்பவர்களை மன்னிக்க வேண்டும்' என்பதே கரம்சந்த் காந்தியின் எண்ணமாக இருந்தது. இதையே காந்திஜி 'அகிம்சை' என்று உணர்ந்தார். அன்பால் எதையும் வெல்லலாம் என்பதே அகிம்சையின் ஆணிவேர். அகிம்சையை காந்திஜியின் மனதில் ஆழ வேரூன்றச் செய்தது இந்தச் சம்பவமே! 'அகிம்சை' என்பதையே ஆயுதமாக்கி, உலகின் மாபெரும் வல்லரசாக அப்போது இருந்த பிரிட்டனை காந்திஜி எதிர்த்தார்.

தன் வாழ்வில் நடந்த எல்லா விஷயங்களையும் இப்படி வெளிப்படையாகச் சொல்வதற்கு பெரும் துணிச்சல் தேவைப்படும். காந்தியிடம் அது இருந்தது. தன்னைப் பற்றிய எல்லா குறைகளையுமே காந்தியே சுயசரிதையில் எழுதியிருக்கிறார். அதனை வேறு யாரும் கண்டுபிடிக்க வேண்டிய அவசியமே ஏற்படவில்லை. இதுவரை காந்தியின் ஒரு குறையைக்கூட காந்தி சொல்லாமல் வேறு யாரும் கண்டுபிடித்ததே கிடையாது.

'மகாத்மா' என்கிற பட்டம் காந்தியடிகளுக்குப் பெருமை சேர்த்தது என்பதைவிட, காந்தியடிகளின் வாழ்வே 'மகாத்மா' என்கிற உயரிய சொல்லுக்கு சரியான விளக்கமாக அமைந்தது.



# பிரார்த்தனையும் பக்தியும்!

**பிரார்த்தனை, பக்தி, நம்பிக்கை, மனசாட்சி பற்றி மகாத்மா காந்தி சொன்ன சில பொன்மொழிகள் இங்கே:**

- ❖ *பிரார்த்தனை அல்லது இறை வணக்கம் என்பது, வீட்டில் உள்ள பாட்டியின் பொழுதுபோக்கல்ல. சரியாகச் செய்தால் மிகச் சிறந்த ஆயுதம் அது.*
- ❖ *ஒருவனுக்கு எந்த அளவுக்கு உள்ளொளி இருக்கிறதோ அந்த அளவுக்குத்தான் பிரார்த்தனை அவனிடம் இருக்கும்.*
- ❖ *எவனொருவன் தினமும் இறை வணக்கத்தில் ஈடுபடுகிறானோ அவன் தினம் தினம் புதியதைச் சேர்க்கிறான். அந்தப் புதிய விஷயங்களை எதனுடனும் ஒப்பிட முடியாது.*
- ❖ *மனதை மகிழ்ச்சியடையச் செய்யும் ஒரு செயல் எதுவாக இருக்கும் என்றால், அது தலைவணங்கிச் செய்யப்படும் இறைவணக்கமே. ஆயிரம் பேர் தலை வணங்குவதை விட ஒருவர் செய்யும் இறைவணக்கமே பெரிது.*
- ❖ *பிரார்த்தனை என்பது இறைஞ்சுவதல்ல. அது ஆன்மாவின் ஏக்கம். ஒருவனின் பலவீனத்தின் தினப்படியான வெளிப்பாடு. அதனால்தான் பிரார்த்தனையின்போது வார்த்தைகளை விட இதயம் அதிகமாகப் பயன்படுகிறது.*
- ❖ *கவலையைப் போல உடம்பை அரிப்பது வேறு ஒன்றும் இல்லை. நீ கடவுளை நம்புவதாக இருந்தால் வீணாக ஏன் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாய்? கவலைகளை அவரிடம் விட்டு விடு.*
- ❖ *இறைவணக்கம், காலையின் சாவி; மாலையின் பூட்டு.*
- ❖ *நம்பிக்கை காரணத்துடன் இருக்க வேண்டும். குருட்டாம்போக்கு நம்பிக்கை எளிதில் மறைந்துவிடும்.*

- இந்த உலகத்தில் நிறைய பேர் பசியுடன் உள்ளனர். அவர்கள் முன்பு கடவுள் ரொட்டித் துண்டாக மாற மாட்டார்.
- கீதை உட்பட எந்த ஒரு திருமறையையும்விட உயர்வானதாக எனது மதிப்பீட்டைப் பயன்படுத்துகிறேன். எனது பகுத்தறிவை விட எந்தவொரு மறை விளக்கமும் மேலோங்கியிருக்க நான் அனுமதிக்க மாட்டேன்.
- சேவையின் மூலமே ஆண்டவனை அடைய முடியும்; ஆகையால் சேவையே என்னுடைய மதம்.
- கடவுள் பரிசுகளையும் தண்டனைகளையும் கொடுத்துக் கொண்டிருப்பவர் அல்ல. அவர் தாமே ஒரு முகவராக செயல்படுபவருமல்ல. ஆனால், உடம்பு எடுத்த ஆன்மாக்கள் விடுதலை பெற்றபின் அடையக்கூடிய ஓர் பரமாத்மாவை நாம் கற்பனை செய்ய முடியுமென்றால் அதுவே கடவுளாகும்.
- எந்தக் காலத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் நமக்கு அரசன் மாதிரியான கடவுள் தேவையில்லை.
- என்னுடைய கருத்தில் கடவுளின் பெயரும் கடவுளின் பணியும் இணைந்தே உள்ளன. இந்த இரண்டையும் பிரிக்க முடியாதாகையால் இவற்றில் எதைக் கொள்வது என்ற பிரச்னையே இல்லை.
- கிளியைப் போல கடவுள் நாமத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே இருப்பது பயனற்றது. கடவுளின் பெயராலும், கடவுளுக்காகவும் செய்யப்படுகின்றன என்கிற உணர்வு இல்லாமல் செய்யப்படும் சேவையும் கூட சற்றும் மதிப்பில்லாதது. சில சமயங்களில் கடவுளின் பெயரை வெறுமனே சொல்லிக்கொண்டே இருக்க வேண்டியுள்ளது என்றாலும், அது சுய அர்ப்பணத்திற்கு – அதாவது கடவுளுக்காக, கடவுளின் பெயரால் செய்யப்படும் சேவைக்கு – ஓர் ஆயத்தமாகும்.
- அன்பு எப்போதும் கேட்காது, கொடுக்கத்தான் செய்யும். அன்பு எப்போதும் வன்மம் கொள்ளாது, பழிவாங்காது. அன்பு எங்கிருக்கிறதோ, அங்கே கடவுள் இருக்கிறார்.
- வாழ்வில் எத்தனை துன்பங்கள் நேர்ந்தாலும் சத்தியம் தவறக் கூடாது; சத்திய நெறியில் வாழ்வதே பெருவாழ்வு.
- உங்கள் உள்ளே இருக்கும் மனசாட்சி நண்பன் இதைச் செய் என்று கூறும்போது, பிற நண்பர்கள் கூறுவதைக் கேட்க வேண்டாம்.
- மனசாட்சியின் மெல்லிய குரல் எட்டிப் பார்க்கும் இடத்திற்கு, மனிதர்களின் சாதாரண குரல்கள் எட்டிப் பார்க்காது.
- எல்லா நீதிமன்றங்களையும் விட உயர்ந்தது மனசாட்சி எனும் நீதிமன்றம்தான்.



# காந்தியின் நடைப்பயணம்!

'உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால், தினமும் அரை மணி நேரம் வாக்கிங் செல்லுங்கள்' என்கிறார்கள் டாக்டர்கள். நிறைய பேர் வாக்கிங்கைத் தவிர்ப்பதற்கு ஏதேதோ காரணங்கள் சொல்கிறார்கள். ஆனால், மகாத்மா காந்தி தன் வாழ்நாள் முழுக்க நடந்துகொண்டே இருந்தார்.

நடப்பதில் ஆர்வம் கொண்டவர் அவர். 'உடற்பயிற்சிகளின் இளவரசன் நடைபயிற்சி' என்று அவர் குறிப்பிடுவது வழக்கம். பள்ளிக்காலத்திலிருந்தே அவருக்கு நீண்ட தூரம் நடப்பது பிடிக்கும். "தினமும் நீண்ட தூரம் நடந்ததால் என் உடல் வலுப்பட்டது" என்று குறிப்பிடுகிறார். மகாத்மா சராசரியாக ஒவ்வொரு நாளும் 18 கிலோமீட்டர் தூரம் பயணம் செய்திருக்கிறார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்ற 34 ஆண்டு காலத்தில் சுமார் 79 ஆயிரம் கிலோமீட்டர் நடந்திருக்கிறார். இது கிட்டத்தட்ட பூமியை இரண்டு முறை சுற்றி வருவதற்கு சமம்.

காந்தியின் நண்பரும் எழுத்தாளருமான ரோமன் ரோலண்ட், "பார்ப்பதற்கு நோஞ்சான் போலத் தெரியும் இந்த எளிய மனிதர் அலுப்பே இல்லாமல் நடந்தார். 'சோர்வு' என்ற வார்த்தையே அவரது அகராதியில் இல்லை" என காந்தியைப் புகழ்கிறார்.

இவ்வளவு நடந்ததால், நோய்கள் அவரை நெருங்கவில்லை. தன் ஆசானும் தியாகியுமான கோபால கிருஷ்ண கோகலேவிடம் ஒருமுறை, "நீங்கள் சுத்தமாக நடப்பதில்லை. அதனால்தான் அடிக்கடி உடம்பு முடியாமல் படுத்துக் கொள்கிறீர்கள்" என்று காந்தி கோபிக்கிறார். அதற்கு கோகலே, "பொது வாழ்க்கைக்கு வந்துவிட்டதால் நேரமில்லை" என்று பதில் சொல்கிறார். தான் வாழ்ந்த காலத்தில் இந்தியாவிலேயே பிஸியான மனிதராக இருந்தபோதும், காந்தி நடக்கத் தவறியது இல்லை.

சட்டம் படிப்பதற்காக லண்டன் சென்றபோது, குறைந்த வாடகையில் அறை எடுத்துத் தங்கியிருந்தார் காந்தி. அங்கிருந்து கல்லூரி நீண்ட தூரம். போதுமான பணம் இல்லாததால், தினமும் அரை மணி நேரம் நடந்தே



கல்லூரி செல்வார். எட்டு மைல் தூரம் போய் வருவது உடற்பயிற்சியாகவும் ஆனது; பணமும் மிச்சமானது.

படித்து முடித்து இந்தியா திரும்பி பம்பாய் உயர் நீதிமன்றத்தில் சிறிது காலம் வழக்கறிஞராக இருந்தபோதும் இதேபோல நடப்பதை வழக்கமாக்கிக் கொண்டார். முக்கால் மணி நேரம் நடந்தே கோர்ட்டுக்குச் செல்வார். லண்டன் குளிரில் சளைக்காமல் நடந்தது போல, பம்பாய் வெயிலிலும் நடந்தார். இதனாலேயே நோய்கள் தாக்காமல் அவர் உறுதியாக இருந்தார்.

தென் ஆப்பிரிக்கா போனபிறகும் இது தொடர்ந்தது. நன்கு சம்பாதிக்க ஆரம்பித்த பிறகும் அவர் நடப்பதை நிறுத்தவில்லை. அங்கு இந்தியர்களைத் திரட்டி போராட்டம் நடத்தியபோது, அவர் 35 மைல் நீள சத்தியாக்கிரக நடைப்பயணத்தையே போராட்ட வடிவம் ஆக்கினார்.

தென் ஆப்பிரிக்காவில் உள்நாட்டுப் போர் நடந்தபோது, போரில் காயம்பட்டவர்களுக்கு சிகிச்சை தரும் தன்னார்வலராக காந்தி சேவை புரிந்தார். அப்போது நோயாளிகளை சுமந்துசெல்லும் ஸ்ட்ரெச்சரைத் தூக்கிக்கொண்டு நீண்ட தூரம் நடந்திருக்கிறார் அவர். கலவரமும் போரும் சூழ்ந்த பிரதேசத்துக்கு அவர் நடந்தே செல்வார். யாரும் தன்னைத் தாக்குவார்கள் என்று அஞ்சியது கிடையாது.

இந்தியாவுக்கு மீண்டும் திரும்பி வந்தபோது ஒருமுறை குடலிறக்க அறுவை சிகிச்சை செய்துகொண்டார். அந்த அறுவை சிகிச்சை முடிந்த சில நாட்களிலேயே மீண்டும் நடக்க ஆரம்பித்துவிட்டார்.

வட்ட மேஜை மாநாட்டுக்காக லண்டன் போனார் காந்தி. குளிர் நடுக்கும் அந்த நாட்டிலும் அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து, பிரார்த்தனைகளை முடித்துவிட்டு, இன்னும் இருள் விலகாத லண்டன் வீதிகளில் ஒற்றை வேட்டியுடன் காந்தி நடைப்பயிற்சி செய்தார். ஸ்வெட்டர் அணிந்து வீதிகளில் வந்த பிரிட்டிஷ் மக்கள், இந்தக் காட்சியைக் கண்டு திகைத்துவிட்டார்கள்.

இப்படி வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் நீண்ட தூரம் நடந்ததால்தான், முதுமையிலும் அவர் உடல் தளரவில்லை. புகழ்பெற்ற தண்டி யாத்திரை சென்றபோது காந்திக்கு 62 வயது. சபர்மதி ஆசிரமத்திலிருந்து கிளம்பி, சளைக்காமல் 24 நாட்கள் நடந்து, 386 கிலோமீட்டர் பயணத்தை நிறைவு செய்து தண்டி கடற்கரையில் உப்பு காய்ச்சினார் அவர். பிரிட்டிஷ் சர்வாதிகார ஆட்சியின் அஸ்திவாரத்தை உலுக்கிய நடைப்பயணம் அது.



# காந்தியின் வாழ்க்கையில்...


❖ மகாத்மா காந்தி உருவாக்கிய சபர்மதி ஆசிரமத்தில் ஒவ்வொரு வேளையும் உணவு உண்பதற்கு அழைப்பு விடுக்கும் வகையில் மணி ஒலிப்பது வழக்கம். சிறிய இடைவெளியில் இரண்டு முறை மணி அடிக்கப்படும். அதற்குள் உணவுக் கூடத்துக்கு வந்துவிட வேண்டும். அதன்பின் கதவு மூடப்படும்.

தாமதமாக வருபவர்கள், உணவுக் கூடத்தின் மூடப்பட்ட கதவுகளுக்குப் பின்னால் காத்திருக்க வேண்டும். ஒரு நாள் இப்படி இரண்டாவது முறை மணியடித்து சிறிது நேரம் கழித்த பிறகே வந்து சேர்ந்தார் காந்திஜி. எனவே, கதவருகே காத்திருந்தார். இதை கவனித்த சேவகர் ஒருவர் ஓடோடி வந்து கதவைத் திறந்து, “பாபுஜி, தயவுசெய்து உள்ளே வாருங்கள்” என்றார்.

ஆனால் காந்திஜி மறுத்தார். “விதிமுறைகள் எல்லோருக்கும் பொதுவானவை. எல்லோரையும் போல நானும் அவற்றைப் பின்பற்ற வேண்டும். இன்று எனக்காக விதிமுறைகளைத் தளர்த்தினால், நாளை மற்றவர்களுக்காகவும் அப்படியே தளர்த்த வேண்டியிருக்கும்” என்றவர், பொறுமையுடன் காத்திருந்தார்.

❖ சுதந்திரப் போராட்ட காலத்தில் சென்னையில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினார் மகாத்மா காந்தி. அவரது உரையைத் தமிழில் மொழிபெயர்த்தவர், ‘தமிழ்த்தென்றல்’ என அழைக்கப்பட்ட திரு.வி.கலியாணசுந்தரனார். அப்போது காந்திஜி சொன்ன ஒரு வரியை திரு.வி.க மொழிபெயர்க்காமல் மறந்துவிட, காந்திஜி தன் பேச்சை நிறுத்தி, திரு.வி.க.விடம் அதைச் சொல்லி மொழிபெயர்க்கச் சொன்னார். தமிழே தெரியாவிட்டாலும் தான் செய்த தவறை மகாத்மா அறிந்தது கண்டு திகைத்துப் போனார் திரு.வி.க.

இது நடந்தது 1921ம் ஆண்டு. அதன்பின் ஆறு ஆண்டுகள் கழித்து மகாத்மாவை சந்திக்கப் போன திரு.வி.க., தன்னை அறிமுகம்



செய்துகொண்டார். "ஞாபகம் இருக்கிறது. முதன்முதலில் சென்னையில் என் பேச்சை மொழிபெயர்த்தவர் நீங்கள்தானே! அப்போதுகூட ஒரு சொற்றொடரை மறந்துவிட்டீர்களே...'' என்றாராம் மகாத்மா.

இடைப்பட்ட ஆறு ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான பொதுக்கூட்டங்களில் பேசியிருப்பார்; ஆயிரக்கணக்கான மனிதர்களை சந்தித்து இருப்பார். ஆனாலும் தன்னைப் பற்றிய அந்த சம்பவத்தை அவர் ஞாபகம் வைத்திருந்தது கண்டு மெய் மறந்தார் திரு.வி.க.

அதனால்தானே அவர் மகாத்மா.

❖ 1925ம் ஆண்டு காந்தியடிகள் கன்னியாகுமரிக்கு வருகை தந்தார். அவர் எந்த ஊருக்குச் சென்றாலும் அங்கிருக்கும் இடங்களுக்குச் செல்வார். மக்களுடன் உரையாடுவார். இறை பக்தி மிக்கவர் என்பதால், கோயில்களுக்குச் செல்வதையும் வாடிக்கையாக வைத்திருந்தார். ஆனால், கன்னியாகுமரியில் இருக்கும் பகவதி அம்மன் கோயிலில் காந்திக்கு அனுமதி மறுக்கப்பட்டது. காரணம், அவர் கடல் தாண்டி வெளிநாடு சென்றவர் என்பதால் கோயிலுக்குள் சென்று வழிபடும் தகுதியை இழந்துவிட்டார் என்பதுதான். 1925, மார்ச் 29ம் தேதி 'கன்னியாகுமரி தரிசனம்' எனும் தலைப்பில் காந்தியே இதைப் பற்றி எழுதியிருக்கிறார். இப்போது காந்திஜிக்கு இந்தியாவில் பல இடங்களில் கோயில் கட்டி கும்பிடும் பக்தர்களும் இருக்கிறார்கள்.

❖ பிறருக்கு உதவுவதில் காந்திஜி விருப்பம் கொண்டவர். ஒருமுறை ரயிலில் ஏறும்போது, ஒரு காலில் அணிந்திருந்த செருப்பு கழன்று தண்டவாளங்களுக்கு இடையே விழுந்துவிட்டது. அடுத்த கணமே, தன் மற்ற கால் செருப்பையும் கழற்றி கீழே போட்டுவிட்டு மேலே ஏறினார். ஒருகால் செருப்பை கண்டெடுப்பவர்களுக்கு அந்தச் செருப்பால் எந்த பயனும் இல்லை என்பதால் தன் மற்றொரு கால் செருப்பை அவர் கழற்றிப் போட்டார்.



# எளிமையே அழகு!

நம் பாரம்பரிய உடையான வேட்டியைவிட எளிமையான வேறொரு உடையைக் காண முடியாது. செல்வாக்கு, மரியாதை, அந்தஸ்து என எல்லாமே வழங்கும் அதே நேரத்தில் எளிமையின் அடையாளமாகவும் வேட்டி இருக்கும். தன் வாழ்நாளின் பிற்பகுதி முழுக்க வேட்டியையே தன் அடையாளமாகக் கொண்ட காந்தி, எளிமையின் வடிவமாக விளங்கினார். அரை ஆடை அணிந்து, எந்த ஆடம்பரத்தையும் விரும்பாமல், ஒரு நிமிடத்தையும் வீணடிக்காமல், சுகத்தைத் தேடாமல், அதிகாரத்தைத் தேடாமல், தேசத்தின் மீட்சியே தன் லட்சியம் என்று இயங்கிய மகாத்மா அவர்.

சுலபமாக வந்ததல்ல நம் சுதந்திரம். மாபெரும் போராட்டமும் தியாக வரலாறும் கொண்டது நம் சுதந்திர சரித்திரம். அந்த நீண்ட சரித்திரத்தில், அகிம்சை என்ற ஜோதியை உயர்த்திப் பிடித்தவர் மகாத்மா காந்தி. சுதந்திர இந்தியாவின் தலைவர்களில் இதனாலேயே அவர் தனித்து தெரிகிறார்.

மகாத்மாவை வெறுமனே சுதந்திரப் போராட்ட தியாகியாக மட்டுமே பார்க்க முடியாது. நம் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தினார். இந்தியாவின் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார வாழ்வில் மகத்தான மாற்றங்களை ஏற்படுத்தியதால் அவரை ‘தேசத்தந்தை’ என்று கொண்டாடுகிறோம்.

தன் வாழ்க்கை முழுக்க ஒற்றை ஊன்றுகோலுடன் எளிய ஆடையில் நடந்து கடந்தார். உயர்ந்த சிந்தனையையும் எளிமையான வாழ்க்கைமுறையையும் அவர் கற்றுத் தந்தார். பொருட்களின் மீதான நம் ஆசைகளைக் கட்டுப்படுத்தி, எளிமையான வாழ்க்கையை வாழ, அவரது வாழ்க்கை நமக்கு உணர்த்துகிறது.

இன்றைய இளைஞர்கள் கனவு காணும் ஒரு இனிய வாழ்க்கை காந்திக்கு கிடைத்தது. ஓரளவுக்கு வளமான குடும்பத்தில் பிறந்தார்; வெளிநாட்டுக் கல்வி சாத்தியமானது. லண்டன் சென்று படித்தார். வெளிநாட்டு

வேலையும் கிடைத்தது. தென் ஆப்ரிக்கா சென்று வக்கீல் தொழில் செய்து நன்றாகத்தான் சம்பாதித்தார். ஆனால் பணம் சேர்க்க வேண்டும் என்ற வெறி அவருக்குள் எப்போதும் இருந்ததில்லை. இறக்கும்போது அவர் பெயரில் சொத்து எதுவும் இல்லை; சொந்த வீடும் இல்லை. ஆனால் அவரது வாழ்வு சிரமமானதாகவும் இருந்ததில்லை.

அதற்காக யாரையும் சம்பாதிக்க வேண்டாம் என அவர் சொன்னதில்லை. பணத்தின் பின்னால் ஓடி வாழ்வின் இயல்பான இன்பங்களைத் தொலைக்க வேண்டாம் என்பதே அவர் உணர்த்தும் பாடம். பொருட்களைச் சேர்க்க செலவிடும் நேரத்திலும் பணத்திலும் புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ளலாம்; உறவுகளுடன் நேரம் செலவிடலாம்; இயலாதவர்களுக்கு உதவலாம். இத்தனையும் செய்தால் முன்பைவிட மகிழ்ச்சி கிடைக்கும்!

தென் ஆப்பிரிக்காவில் இருந்தபோது அவர் கூட்டு வாழ்க்கைமுறை ஒன்றை உருவாக்கினார். 'ஃபோனிக்ஸ் பண்ணை' என அவர் உருவாக்கிய பண்ணையில் பாரிஸ்டர் காந்தி முதல் கூலிகள் வரை அனைத்து இனத்தினரும் தங்களது வருமானங்களை அப்படியே பண்ணைக்கு அளித்துவிடுவார்கள். அங்கு எல்லோருக்கும் எல்லாமும் சமம். காந்திஜி தென் ஆப்ரிக்காவை விட்டு வெளியேறும்போது 100 ஏக்கர் நிலம், தனது சொத்துக்கள், விலையுயர்ந்த பரிசுப் பொருட்கள் எல்லாவற்றையும் அந்தப் பண்ணைக்குக் கொடுத்துவிட்டார்.



காந்தி தன் வாழ்க்கை வரலாற்று நூலுக்கு 'சத்திய சோதனை' என்றே பெயரிட்டார். அது, சத்திய சோதனை. சத்திய வெற்றி அல்ல. பரிசோதனை என்றாலே வெற்றியும் இருக்கும் தோல்வியும் இருக்கும் அல்லவா? அவர் தன் வாழ்நாளை ஒரு சோதனைக் கூடமாக அமைத்துக்கொண்டார். சத்தியத்தை சோதனை செய்தார். அதன் விளைவுகளை நம்முடன் பகிர்ந்து கொண்டார்.

வாழ்நாள் முழுக்க ரயிலின் மூன்றாம் வகுப்புப் பெட்டியில் (இப்போது இந்திய ரயில்களில் அப்படி ஒரு வகுப்பே இல்லை!) பயணம் செய்தார் மகாத்மா. தான் உடுத்த எளிய உடை, சாப்பிட்ட அலுமினியத்தட்டு, தூங்கிய கோரைப்பாய், உடல் தேய்த்துக் குளித்த வெள்ளைக்கல் இவற்றுடன் அவர் மூன்றாம் வகுப்புப் பெட்டியில் எளிமையாக பயணம் செய்தார். மகாத்மா மறைந்தபோது, முழுவதும் மூன்றாம் வகுப்புப் பெட்டிகளால் ஆன சிறப்பு ரயில் ஒன்றில் அவருடைய அஸ்தியைக் கொண்டு சென்று இந்தியா முழுக்க கரைத்தனர்.

தன்னைப் பின்பற்றிய எத்தனையோ பணக்காரர்களை எளிமையான வாழ்வுக்குப் பழக்கியவர் அவர். 'எளிமையே அழகு' என தன் வாழ்க்கையாலும் வார்த்தைகளாலும் உணர்த்தினார்.



# காந்தி சினிமா!


தன் வாழ்நாள் முழுக்க சினிமாவை வெறுத்த காந்தியின் வாழ்வைப் பற்றி மூன்று முக்கியமான திரைப்படங்கள் எடுக்கப்பட்டன. காந்தி வாழ்ந்த காலத்திலேயே அவரைப் பற்றிய முதல் படத்தை எடுத்தவர் ஏ.கே.செட்டியார் என்பவர். 1937ம் ஆண்டு தொடங்கி பல நாடுகளைச் சுற்றி, ஏராளமான தகவல்களையும் துண்டு துண்டு சலனப்படங்களையும் சேர்த்து ‘காந்தி’ படத்தை உருவாக்கியவர் இவர். ஏ.கே.செட்டியார் ஒருமுறைகூட காந்தியிடம் நேரடியாக பேசியதில்லை. ஆனாலும் காந்தியின் பக்தர்.

காந்தி நிகழ்த்திய உரைகள், தலைவர்களுடனான சந்திப்புகள் என தனிப்பட்ட முறையில் சிலர் படம் பிடித்து வைத்திருந்ததை எல்லாம் சேகரித்து தமிழிலும் தெலுங்கிலும் அவர் இந்தப் படத்தை உருவாக்கினார். படத்தை வெளியிடும் நேரத்தில் பிரிட்டிஷ் அரசு இதைப் பறிமுதல் செய்ய முயன்றது. ரகசியமாகப் பதுக்கி வைத்து பிறகு இதை ரிலீஸ் செய்தார் செட்டியார்.

சென்னை, காரைக்குடி, சிதம்பரம் என பல நகரங்களில் வெற்றிகரமாக ஓடிய இந்தப் படத்தை, இந்தியா சுதந்திரம் அடைந்த நாளில் டெல்லியில் திரையிட்டார் செட்டியார். அன்று காந்தி கொல்கத்தாவில் இருந்ததால், இந்தப் படத்தைப் பார்த்துதான் தேசத் தலைவர்கள் திருப்தி அடைந்தார்கள்.

❖ இன்னொரு படம், ‘காந்தியைப் பற்றிய ஒரு சிறந்த திரைப்படத்தை வெள்ளைக்காரரால்தான் எடுக்க முடியும்’ என்ற கருத்தை ஏற்படுத்திய ரிச்சர்ட் அட்டன்பரோ இயக்கிய ‘காந்தி’. மகாத்மா வாழ்நாள் முழுக்க எதிர்த்த பிரிட்டனில் பிறந்தவர் அட்டன்பரோ. காந்தியின் மீது கொண்டிருந்த அளவற்ற பக்தியால் 20 ஆண்டுகள் போராடி இந்தப் படத்தை அவர் எடுத்தார். பென் கிங்ஸ்லி என்ற நடிகர் இந்தப் படத்தில் காந்தியாகவே வாழ்ந்திருக்கிறார். இந்தியாவிலும் மேற்கத்திய

நாடுகளிலும் காந்திய சிந்தனைகள் மீண்டெழ அவருடைய 'காந்தி' படம் ஒரு கருவியாக இருந்தது. எட்டு ஆஸ்கர் விருதுகளை இந்தப் படம் பெற்றது.



'கையில் குச்சி ஊன்றிக் கொண்டிருக்கும், உடம்பில் ஏதோ ஒரு துணியை சுற்றிக் கொண்டிருக்கும் இந்தச் சிறிய பழுப்பு நிற மனிதனைப் பற்றி அறிந்துகொள்ள எவருக்கு ஆர்வமிருக்கும்?' என மேற்கத்திய பட நிறுவனங்கள் நிராகரித்தபோது, 5 கோடி ரூபாய் நிதியுதவி செய்து இந்தப் படத்தை எடுக்க இந்திரா காந்தி உதவினார். "இது சுதந்திரப் போராட்டத்தின் வரலாற்றை முழுமையாகச் சொல்லும் திரைப்படம் அல்ல. காந்தி எனும் மகத்தான எளிய மனிதரின் வாழ்க்கையை மூன்று மணி நேரத்தில் திரையில் காட்டும் முயற்சி மட்டுமே" என அட்டன்பரோ சொன்னார்.

❖ ஷ்யாம் பெனகலின் 'தி மேக்கிங் ஆஃப் மகாத்மா' திரைப்படம், காந்தியின் 21 ஆண்டு கால தென் ஆப்ரிக்க வாழ்க்கையை மிக நேர்த்தியாகப் பதிவு செய்கிறது. ரஜித் கபூர் என்பவர் இதில் காந்தியாக நடித்திருந்தார். காந்தியின் நகைச்சுவை உணர்வையும் இந்தப் படம் காட்டுகிறது. "நமது போராட்டத்தால் என்ன பயன்? நாம் சொல்வது அரசாங்கத்தின் காதுகளில் விழுவதே இல்லை" என தொண்டர்கள் பலர் விரக்தியோடு புலம்பும்போது, "என்ன செய்வது? என் குரல் அப்படி!" என்று சிரிக்கும் காந்தியை இந்தப் படத்தில் பார்க்கலாம். "ஒரு சத்தியாக்கிரகி தனக்கு எதிர்நிலை கொண்டவனை நம்பவேண்டும். அவன் தன்னை இருபது முறைகள் ஏமாற்றினாலும் கூட" என்று அகிம்சைப் போராட்டத்தின் இலக்கணம் சொல்லும் காந்தி, இதில் நிறைந்து நிற்கிறார். காந்தி தன் தவறுகளில் இருந்து தப்பிக்கவோ, அவற்றை மறைக்கவோ எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளாதவர். அவற்றிலிருந்து மீண்டு முன்னைவிடவும் முனைப்புடன் செயல்படக் கூடியவர். எப்போதும் தன்னை பரிசோதனைகளுக்கு உட்படுத்திக் கொண்டவர் என்ற முழு சித்திரத்தையும் இந்தப் படம் காட்டுகிறது.



# எதிரியை நேசியுங்கள்!

நண்பர்களை நேசிப்பது சுலபம்; உறவினர்கள்மீது அன்பு காட்டுவது அதைவிட எளிது. எதிரிகளை நேசிக்க முடியுமா? ஒரு வழக்கறிஞராக தென் ஆப்ரிக்கா போன காந்தியை அந்த மண் மகத்தான மகாத்மாவாக திருப்பி அனுப்பியது. 'எதிரியை நேசிப்பது எப்படி' என்பதை அங்கு காந்தி கற்றுக்கொண்டார். நமக்கும் கற்றுத் தருகிறார்.

❖ தென் ஆப்ரிக்காவில் இந்தியர்களின் சம உரிமைக்காக பெரும் போராட்டங்கள் நடத்தினார் காந்தி. அதனால் அங்கு ஆதிக்கம் செலுத்திவந்த வெள்ளையர்களின் தாக்குதலுக்கு அவர் அடிக்கடி ஆளாவதுண்டு. அப்படி ஒருமுறை அவர் மீது வெள்ளை இன வெறியர்கள் தாக்குதல் நடத்தியபோது, அதைத் தடுத்து காந்தியைக் காப்பாற்றியவர் ஒரு வெள்ளைக்காரப் பெண்மணி. அவர் ஒரு போலீஸ் அதிகாரியின் மனைவி. "ஏன் இவரைத் தாக்குகிறீர்கள்? இவர் ஒரு வழக்கறிஞர் தெரியுமா?" என அவர்களிடம் சண்டை போட்டு அவரைக் காப்பாற்றுகிறார் அந்தப் பெண்.

இந்த சம்பவம் காந்திக்குள் ஒரு முக்கியமான பண்பை விதைக்கிறது. 'எதிரியையும் எதிரியின் செயல்களையும் பிரித்துப் பார்ப்பது' என்பதுதான் அது. ஒருவர் செய்யும் தவறுக்காக பொத்தாம்பொதுவாக எல்லோரையும் குற்றம் சொல்லும் போக்கு நம்மிடம் இருக்கிறது. 'இந்த ஊர்க்காரர்களே இப்படித்தான்' என ஒருவரின் குறையை ஊருக்கே பொதுவாக்குவது, இனத்துக்கே பொதுவாக்குவது என வன்மம் வளர்க்கிறார்கள் பலர். இன்றைய சமூகப் பிரச்னைகள் பலவற்றின் ஆணிவேராக இப்படிப்பட்ட வன்மமே இருக்கிறது. எதிரியின் செயல்களைத்தான் நாம் கடுமையாக எதிர்க்க வேண்டும்; எதிரியை அல்ல.

❖ தென் ஆப்ரிக்காவில் வழக்கறிஞராக தொழில் செய்யப் போன காந்தி, ட்ரான்ஸ்வால் நகரிலிருந்து நடால் நகருக்கு ரயிலில் சென்றார். அவரது பெட்டிக்கு வந்த ஒரு வெள்ளையர், "கூலியான உனக்கு இங்கு

இடமில்லை" என காந்தியை அவமதித்தார். காந்தியிடம் டிக்கெட் இருந்தும், பெட்டி–படுக்கைகளோடு குண்டுகட்டாக பிளாட்பாரத்தில் வீசி எறியப்பட்டார். பிற்காலத்தில் ராஜ்மோகன் காந்தி இந்த நிகழ்வைக் குறிப்பிடும்போது சொல்வதுண்டு, 'பீட்டர்மாரிஸ்பர்க் பிளாட்பாரத்தில் விழும்போது அவர் மோகன்தாஸ் காந்தி; எழும்போது அவர் மகாத்மா காந்தி'. அவரது வாழ்க்கையின் பாதையையே மாற்றிய ஒற்றைச் சம்பவம் அது. அகிம்சை வழியில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்துவதற்கு அவரைத் தூண்டிய ஆரம்பப்புள்ளி.



சாதாரண மனிதர்கள் இப்படி நிகழ்ந்தால், தள்ளிவிட்ட நபரிடம் சண்டைக்குப் போவார்கள்; கோர்ட்டுக்கு இழுப்பார்கள்; வீட்டுக்கு ஆள் அனுப்புவார்கள். ஆனால் காந்தி அந்த வெள்ளையரை எதிரியாக நினைக்கவில்லை. அவருக்குள் இருந்த ஆதிக்க வெறி என்ற செயலை எதிர்க்கத் தீர்மானித்தார்.

❖ தென் ஆப்ரிக்காவில் டிரான்ஸ்வால் நகரத்தில் காந்திஜி தங்கியிருந்தபோது, அவருக்கு பல வெள்ளையர்கள் நண்பர்களாக இருந்தார்கள். அந்த நகரச் சட்டப்படி இந்தியர்கள் எவரும் பொது நடைபாதையில் நடக்கக்கூடாது; இரவு ஒன்பது மணிக்கு மேல், அனுமதிச்சீட்டு பெறாமல் செல்வதும் கூடாது. காந்திஜி அனுமதிச்சீட்டு வைத்திருந்தும், ஒருநாள் இரவில் வெளியே போனபோது, ஒரு வெள்ளைக்கார காவலன் அவரைத் தாக்கினான்.

காந்தி தடுமாறி விழுந்தார். அப்போது காந்தியின் நண்பர் கோடெஸ் என்பவர் அங்கே வந்தார். காந்திஜி கீழே விழுந்து கிடப்பதைப் பார்த்ததும் பரபரப்புடன் குதிரையிலிருந்து இறங்கி, "நண்பரே! அடி ஏதும் பட்டு விட்டதா" என்று அன்போடு விசாரித்தார். தாக்கிய காவலன் மீது கடுங்கோபம் கொண்டார். "முரட்டுத்தனமாக தாக்கிய இவன்மீது வழக்குத் தொடர வேண்டும்" என்றார். காந்திஜி அமைதியாக அவரைப் பார்த்து சிரித்தபடி சொன்னார். "பாவம்! கறுப்பு மனிதர்களிடம் இவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது இந்த நாட்டுச் சட்டம். அவன் மேல் கோபம் கொண்டு பழிவாங்க மாட்டேன். தீமையை மன்னித்து விட்டேன்." அந்தக் காவலன் காந்திஜியிடம் ஓடிவந்து மன்னிப்பு கேட்டான்.

நேசத்தையும் மன்னிப்பையும் பரப்பினால், கருணையும் அன்பும் எவரது மனதிலும் முளைவிட்டு எழும் என மகாத்மா நம்பினார். அந்த நம்பிக்கை இன்றும் அதிசயங்கள் நிகழ்த்தும்.



# மகாத்மா மொழிகள்

- ❖ மனதின் ஜன்னல்களைத் திறந்து வைத்திருக்க வேண்டும். அதே சமயம், காற்றில் நமது கால்கள் அடித்துக்கொண்டு போய்விடக்கூடாது.
- ❖ ஒருவன் தனக்குத் தேவையற்றதை விலைக்கு வாங்கினால், அது அவன் பணத்தை அவனே திருடுவதற்குச் சமமாகும்.
- ❖ சுய மனக்கட்டுப்பாடுகளை உருவாக்கிக்கொள்பவரே உண்மையில் சுதந்திரமானவர்.
- ❖ பலவீனர்கள் பிறரை மன்னிக்க மாட்டார்கள்; மன்னிப்பது என்பது வலிமையுடையோரின் குணம்.
- ❖ மற்றவர்களைக் கெட்டவர்கள் என்று சொல்வதன் மூலம், நாம் நல்லவர்களாகி விட மாட்டோம்.
- ❖ தவறுகளை ஒப்புக்கொள்வது என்பது, தரையில் தூசுகளை அகற்றும் துடைப்பத்தின் செயல் போன்றது. அதனால், மனம் சுத்தமாவதுடன் பிரகாசமடையும்.
- ❖ அகிம்சையிலும் சத்தியத்திலும் தோல்வி என்பதே கிடையாது.
- ❖ பொய்யால் எந்தப் பெருமையும் இல்லை; உண்மையால் எந்தச் சிறுமையும் இல்லை!
- ❖ வெறும் ‘உண்மை’ என்ற வார்த்தைக்கு மதிப்பு இல்லை. உண்மையை மனிதர்கள் பின்பற்றி, அவர்களிடம் அது மாற்றத்தை ஏற்படுத்தி, அதை நிலைநாட்ட அவர்கள் தங்களையும் தியாகம் செய்யத் தயாராக இருப்பதுதான் உண்மை.
- ❖ எது முழுமையாகவும் உண்மையானதாகவும் இல்லாமல் இருக்கிறதோ, அதை எந்தப் பெயர் சொல்லி அழைப்பதிலும் பயனில்லை.
- ❖ எல்லாவற்றிற்கும் அறம்தான் அடிப்படை. அந்த அறத்திற்கே உண்மைதான் அடிப்படை.

❖ நீ கொண்டிருக்கும் உண்மையான கருத்திற்கு ஆதரவு இல்லாமல் போனாலும், உண்மை உண்மையாகத்தான் இருக்கும்!

❖ உண்மை என்பது சுய ஆதாரம் கொண்டது. அதை மூடியிருக்கும் அறியாமை என்ற மூடியை விலக்கி விட்டால், உண்மை பளீரெனப் பிரகாசிக்கும்.

❖ நீ மேற்கொள்ளும் செயல் உண்மையானதாக இருந்தால் அது எந்த காலத்திலும் பாதிப்பை ஏற்படுத்தாது.

❖ எத்தகைய ஆதரவுப் பிரசாரம் நடந்தாலும், பொய்மை எப்போதும் உண்மையாகாது; பிறர் கவனிக்கவில்லை என்றாலும் உண்மை எந்த நேரத்திலும் பொய்மையாகாது.

❖ உண்மை பொய்மையைக் கொல்கிறது. அன்பு கோபத்தை வெல்கிறது. தன்னை வருத்துதல் வன்முறையை அறுக்கிறது. இந்த உயரிய கொள்கைகள் துறவிகளுக்கானதல்ல; நமக்கானது.

❖ அகிம்சையும் வாய்மையும் எனது இரு நுரையீரல்கள் போன்றவை.

❖ நீங்கள் மானுடத்தின் மீது நம்பிக்கை இழந்துவிடக் கூடாது. மானுடம் என்பது ஒரு பெருங்கடல், அதன் சில துளிகள் அசுத்தமாக இருக்கிறது என்பதால் பெருங்கடலே அசுத்தம் என எண்ணிவிடக் கூடாது.

❖ நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது முக்கியமல்ல; நீங்கள் செய்கிறீர்கள் என்பதுதான் முக்கியம். ஏனெனில், நீங்கள் செய்யவில்லை என்றால், உங்களுக்காக எவரும் அதைச் செய்ய மாட்டார்கள்.

❖ நமது செயல்களின் விளைவு என்னவாக இருக்கும் என்பதை நாம் அறிய முடியாது. ஆனால் ஒன்று, எதையுமே செய்யவில்லை என்றால் எதுவுமே விளையாது.

❖ உலகை மாற்ற வேண்டும் என்று விரும்பும் நாம் முதலில் மாற வேண்டும். நீ எந்தவிதமான உலகத்தைப் பார்க்க விரும்புகிறாயோ, அதுபோலவே நீ மாறு. பிறர் எப்படி இருக்க வேண்டும் என்று நீ விரும்புகிறாயோ, முதலில் அதுபோல நீ மாறு.

❖ உங்களிடம் வேடிக்கை உணர்வு இல்லையென்றால், நீங்கள் தற்கொலை செய்து நீண்டகாலமாகிறது என்று அர்த்தம்.

❖ எப்போதுமே உங்கள் சிந்தனைகளை சுத்தமாக வைத்திருந்தால் எல்லாமே நன்றாகத்தான் இருக்கும்.

❖ தீர்மானம் மிக்க மன உறுதியும், எந்தச் சூழ்நிலையிலும் அசைக்க முடியாத நம்பிக்கையும் கொண்டிருக்கும் சின்னஞ்சிறு குழுகூட வரலாற்றின் போக்கையே மாற்றும் திறன் படைத்தது.

❖ செயல்தான் முக்கியம்; செயலின் பலனல்ல. நீ சரியானதைத்தான் செய்ய வேண்டும். உன் செயல்களுக்கு என்ன பலன்கள் கிடைக்கும் என்பது உனக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனால், நீ ஒன்றுமே செய்யாமலிருந்தால் எந்தப் பலனுமே கிடைக்காது அல்லவா!



# காந்தி சொன்ன கல்விமுறை!

காந்திஜிக்கு தாய்மொழிப்பற்று அதிகம். தன்னுடைய சுயசரிதையை தாய்மொழியான குஜராத்தியில்தான் எழுதினார். அவருடைய செயலாளர் மகாதேவ தேசாய் அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். தாய்மொழியில் படிக்கும் கல்விதான் பயன்தரும் என்று நம்பினார். அது கட்டாயமாக்கப்பட வேண்டும் என்றுகூட வாதிட்டார்.

‘எனது வீட்டைச் சுற்றிலும் சுவரெழுப்பி சாளரங்களை அடைத்துவிட நான் விரும்பவில்லை. எல்லா நிலங்களின் பண்பாடுகளும் என் வீடெங்கும் முடிந்தவரை சுதந்திரமாக உலவுவதையே விரும்புகிறேன். ஆனால் அவை எவற்றாலும் நான் அடித்துச் செல்லப்பட மறுக்கிறேன். மற்றவர்களின் இல்லங்களில் ஓர் ஊடுருவியாக, பிச்சைக்காரனாக, அடிமையாக வாழ மறுக்கிறேன். பொய்யான பெருமைக்காகவும், கேள்விக்குரிய சமூக ஆதாயங்களுக்காகவும் எனது சகோதரிகளின் மீது ஆங்கிலம் கற்க வேண்டிய பளுவினைச் சுமத்த மறுக்கிறேன்’ என்று வாதிட்டார்.


தாய்மொழியைத் தாண்டிய வேறொரு மொழி பயிற்றுமொழியாக இருப்பது சிக்கல்களை ஏற்படுத்தும் என்றார் அவர். ‘எண்கணிதம், இயற்கணிதம், வடிவியல், வேதியல், வானவியல் போன்ற பாடங்களில் ஆங்கிலவழியில் நான்கு ஆண்டுகளில் நான் கற்றவற்றை, என் தாய்மொழி குஜராத்தியில் நான் ஒரே ஆண்டில் கற்றிருப்பேன். அந்தப் பாடங்களைப் புரிந்துகொள்வது இன்னும் எளிமையாகவும் தெளிவாகவும் இருந்திருக்கும். இந்த ஆங்கிலப் பயிற்றுமொழி எனக்கும் என் குடும்பத்தாருக்கும் இடையே கடக்கமுடியாத ஒரு தடையை ஏற்படுத்தியது’ என்று அவர் குறிப்பிடுகிறார்.

‘உண்மையான கல்வி என்பது உங்களிலிருந்து சிறந்தவற்றை வெளிக்கொணர்வதில் உள்ளது. மனிதம் என்கிற புத்தகத்தைவிடச் சிறந்த புத்தகம் வேறென்ன இருக்க முடியும்? அது ஒரு மகத்தான, புனிதப்படுத்தக்கூடிய கல்வியாக இருக்கும். என்னுடைய நம்பிக்கை

குறுகிய ஒன்றல்ல. மனித சகோதரத்துவத்தை அடைய வைக்கக்கூடியது' என்று எழுதினார் காந்தி.

1835ம் ஆண்டு ஆங்கிலேய அரசு புகுத்திய கல்வி முறைதான் பின்னர் சில மாற்றங்களுடன் தொடர்ந்து பின்பற்றப்பட்டது. ஆங்கிலேய அரசின் மெக்காலே கல்வித் திட்டத்தின் சீர்கேடுகளைக் காந்தி நன்றாக உணர்ந்திருந்தார். 'பணம் படைத்தோருக்கு பணி செய்யும் நபர்களை மட்டுமே அந்தக் கல்வித்திட்டம் உருவாக்கும்' என அவர் அறிந்திருந்தார். ஆங்கிலேயர்களால் புகுத்தப்பட்ட கல்விக் கொள்கை, நமது கலாசார பண்பாடுகளை, நம் முன்னோர்களின் அடையாளங்களை வேருடன் மறைத்து விடும் என்று காந்தி எதிர்த்தார்.

'அந்நிய மொழி பயிற்றுமொழியானது நம் குழந்தைகளைத் தம் சொந்த நாட்டிலேயே அந்நியர்களாக்கிவிட்டது. நடப்பு முறையின் மிகப் பெரிய துன்பியல் விளைவு இதுதான். அந்நிய மொழிக் கல்வி நம் நாட்டின் பல்வேறு பிராந்திய மொழிகளின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்துவிட்டது. ஒரு சர்வாதிகாரிக்குரிய அதிகாரம் எனக்கிருந்தால், இன்றே நம் சிறார்களை அந்நிய மொழி மூலமாகப் பயிற்றுவித்தலை நிறுத்திவிடுவேன். இந்த மாற்றத்தை உடனே அறிமுகப்படுத்தச்செய்வேன். இது உடனடித் தீர்வு தேவைப்படும் ஒரு கேடு' என்று அவர் கடுமையாகக் குறிப்பிட்டார்.



ஆங்கிலவழிக் கல்வி முறை நேரடியான சமுதாயச் சூழ்நிலைகளிலிருந்தும் உடல் உழைப்பிலிருந்தும் நமது குழந்தைகளைப் பிரித்துவிடும் என அறிந்த அவர் 'உண்மையான கல்வி என்பது தனிமனிதனின் மனதில் பண்பு, பொறுமை, ஞானம், உண்மை ஆகியவற்றை விதைப்பதில் அடங்கியிருக்கிறதே தவிர இலக்கியப் பயிற்சியில் இல்லை' என்று கூறினார். வாழ்க்கை அனுபவங்களின் வழியே சுதந்திரமாகக் கல்வி கற்பதே சிறந்தது என்றார் அவர்.

'மழலைப் பருவம் முதலே உடலுழைப்பின் மதிப்பினைக் குழந்தைகளுக்கு உணர்த்தவேண்டும். உடலுழைப்பின் மதிப்பை நம் குழந்தைகள் வெறுப்பது போல கல்வி மாற்றிவிடக்கூடாது. ஒரு விவசாயியின் மகன், பள்ளி சென்று முடித்தபின், நிலத்தில் வேலை செய்யத் தகுதியற்றவனாகிவிடுகிறான். இப்படிச் செய்வதன் பெயர் கல்வி இல்லை' என்றார் அவர்.

கல்வியில் தொழிற்பயிற்சியை அவர் வலியுறுத்தினார். நூல் நூற்றலும் அதில் முக்கியமான இடம் பிடித்திருந்தது. 'எதிர்காலத்தின் எந்த ஒரு பாடத்திட்டத்திலும், நூல் நூற்றல் கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டும். எப்படி நம்மால் சுவாசிக்காமலும் உண்ணாமலும் இருக்கமுடியாதோ, அவ்வாறே வீட்டில் எல்லாரும் நூற்பதை வலியுறுத்த வேண்டும். அதைச் செய்யாமல் பொருளாதாரச் சுதந்திரம் அடைவதும், வறுமையை விரட்டுவதும் சாத்தியமாகாது' என்றார் அவர்.




# இளைஞர்களுக்கான வாழ்க்கைப்பாடம்!

‘நமக்கும் காந்திக்குமான வித்தியாசம்... காந்தி நாட்டுக்காக உழைத்தார்; நாம் காந்தி நோட்டுக்காக உழைக்கிறோம்!’ இளைஞர்கள் மத்தியில் பரவலாகப் புழங்கும் நகைச்சுவை இது. இன்றைய இளைய தலைமுறையினர் தங்கள் வேலைச்சூழல் குறித்து கவலைப்படுகிறார்கள். மன அழுத்தம், வெற்றிக்கான நிர்பந்தம், போட்டி நிறைந்த களம் எல்லாமே அவர்களுக்கு கவலை தருகிறது.

தேசப்பிதாவாக நமக்கு சுதந்திரம் வாங்கித் தந்த அடையாளம் மட்டுமில்லை அவர்; அன்பையும் அகிம்சையையும் உண்மையையும் வாழ்க்கை நெறியாக போதித்தவர் மட்டுமில்லை அவர். ‘நம் வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும்’ என இளைஞர்களை செதுக்கும் ஒரு பாடமாகவும் தனது வாழ்க்கையைக் கொடுத்துச் சென்றிருக்கிறார். அவர் வாழ்க்கை தரும் பாடங்கள் நான்கு...

**மன அழுத்தம் கொள்ளாதீர்கள்:** காந்தி வாழ்ந்த காலத்தில் அவரை விட பரபரப்பாக இயங்கிய ஒரு மனிதர் இருந்திருக்க முடியுமா? எத்தனை போராட்டங்கள், எத்தனை தலைவர்களின் சந்திப்புகள், எத்தனை கூட்டங்கள், தினம் தினம் தேடி வரும் மக்களை பார்த்துப் பேச வேண்டிய அவசியம். இத்தனை வேலைகளும் அவர் மனதை நிலைகுலையச் செய்ததில்லை. எல்லா வேலைகளுக்கு நடுவிலும் அவர் தனக்கான நேரத்தைக் கண்டெடுத்தார். தியானம் செய்தார், தனக்கான உணவை சமயங்களில் தானே சமைத்து சாப்பிட்டார். நேரு, படேல் போன்ற தலைவர்களுடனான கூட்டத்துக்கு மத்தியில் ஒரு எளிய தொண்டருக்கு ராட்டையில் நூல் நூற்க அவர் பாடம் எடுப்பார். ஒரு குழந்தையோடு விளையாடி சிரித்துக் கொண்டிருப்பார். இப்படித்தான் அவர் மன அழுத்தம் தவிர்த்தார். பெரிய பெரிய செயல்களைச் செய்ய சின்னச் சின்ன இளைப்பாறல்களே உதவுகின்றன என்பதை அவர் உணர்ந்திருந்தார்.



**எண்ணங்களில் தெளிவாக இருங்கள்:** 'எண்ணங்களே ஒரு மனிதனைத் தீர்மானிக்கின்றன. ஒருவன் என்ன நினைக்கிறானோ, அதுவாகவே அவன் ஆகிறான்' என்றார் காந்தி. ஒருவருடைய ஆளுமையைத் தீர்மானிப்பது அவரது சிந்தனையும் செயல்களும்தான். நேர்மறையாக சிந்திப்பவர்கள் தங்களின் இலக்குகளை சுலபமாக அடைவார்கள். எதிர்மறையாக சிந்திப்பவர்கள், தங்கள் தோல்வியை எண்ணி துவண்டுவிடுகிறார்கள். காந்திஜியின் பணிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நமது செயல்கள் ஒன்றுமே இல்லை. ஐம்பது ஆண்டுகளாக அவர் இடையறாது பாடுபட்டார். புதிய ஆயுதம், புதிரான போர்க்களம், முடிவு தெரியாத ஒரு போரில் அவர் சோர்ந்துவிட்டார் என்று அனைவரும் நினைத்தனர். 'இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைப்பது சாத்தியமில்லாத விஷயம்' என போராடிய பல தலைவர்களே நினைத்தனர். ஆனாலும் காந்தி தொடர்ந்து செயலாற்றினார். மற்றவர்களின் எதிர்மறை சிந்தனைகள் தன்னைத் தாக்காமல் பார்த்துக்கொண்டார்.

**உங்களால் முடிந்ததைச் சொல்லுங்கள்:** எதையும் சொல்வது சுலபம்; அதைச் செய்து முடிப்பது கடினம். அடுத்தவர்களுக்கு அறிவுரை சொல்பவர்கள் இதை உணர்வதில்லை. 'உங்களால் பின்பற்ற முடியாத விஷயங்களை மற்றவர்களுக்கு உபதேசமாகச் சொல்லாதீர்கள்' என்பது காந்தி கற்றுத் தரும் இன்னொரு பாடம். பிறருக்கு அவர் சொன்ன ஒவ்வொரு உபதேசத்தையும் முதலில் அவர் தனக்குத்தானே பொருத்திப் பார்த்தார். அவர் அனைத்தையுமே தன்னிலிருந்துதான் தொடங்குவார். அவரது சொல்லுக்கும் செயலுக்கும் இடையே இடைவெளி கொஞ்சமும் இருக்கவில்லை. காந்தி ஒன்று சொன்னால் அது உண்மைதான் என்பதை அவரை எதிர்த்தவர்களும் அறிந்திருந்தார்கள். எனவே அவருடைய வாழ்விலும் செயலிலும் எப்போதுமே ஒருவித முழுமை இருந்தது.

**எப்போதும் சரியானதைச் செய்யுங்கள்:** நான்கு சுவர்களுக்குள் ஒருவிதமாகவும், வாசலைத் தாண்டியதும் வேறுவிதமாகவும் காந்தி இருந்ததில்லை. அடுத்தவர்கள் பார்க்கிறார்களே என்பதற்காக நடிக்கவும் செய்ததில்லை. 'செயல்தான் முக்கியம். அதன் விளைவு முக்கியமில்லை' என்பதில் காந்தி தெளிவாக இருந்தார். 'எப்போதும் சரியானதைச் செய்யுங்கள். அதைச் செய்யும் சக்தி உங்களுக்கு இல்லாமல் இருக்கலாம்; நேரம் இல்லாமல் இருக்கலாம்; அதில் எந்தப் பலனும் கிடைக்காமலும் போகலாம். ஆனால் அதற்காக நீங்கள் சரியானதைச் செய்வதை நிறுத்தாதீர்கள்' என்பது அவரது போதனை. அடுத்தவர்கள் பார்க்கிறார்களே என நடிப்பவர்கள், சீக்கிரமே அம்பலப்பட்டுப் போகிறார்கள்.

RAMRAJ



# சுதேசி காந்தி!

வல்லரசு நாடுகள் ஆயுதங்களைக் காட்டி பயமுறுத்தி ஏழை நாடுகளை அடிமைப்படுத்தியதும், உலகம் முழுவதும் அடிமைப்பட்டு கிடந்த மக்கள் விடுதலை உணர்வு கொண்டு எழுச்சியுடன் போராடியதும் 20ம் நூற்றாண்டின் உலக வரலாறு. எல்லா நாடுகளும் ஆயுதம் கொண்டே விடுதலையைப் பெற முடியும் என்று நினைத்து ரத்தம் சிந்தி யுத்தம் நடத்தியபோது, இந்தியா அகிம்சை என்கிற ஆயுதத்தை ஏந்தியது. கத்தியின்றி ரத்தமின்றி நடந்த இந்திய விடுதலைப் போராட்டத்தை தலைமையேற்று வெற்றிகரமாக நடத்திக் காட்டியது காந்தியடிகளின் அகிம்சை எனும் தத்துவம்.

அகிம்சையுடன் சுதேசி முழக்கத்தை இணைத்து இந்தியாவுக்கான பொருளாதார விடுதலையையும் தேட முயன்றார் காந்தி. உப்பு சத்தியாகிரகம் தொடங்கி, தெருத்தெருவாக கதர் ஆடைகளை விற்பனை செய்வதுவரை எல்லா போராட்டங்களின் அடிநாதமாக அதுவே இருந்தது.

‘அந்நியத் துணிகளைப் புறக்கணிக்க வேண்டும்’ எனச் சொல்லி அவர் சுதேசி இயக்கத்தைத் துவக்கியதன் நோக்கங்கள் இரண்டு. ஒன்று, இந்தியாவின் ஏழை நெசவாளர்கள் வாழ்வு பெற வேண்டும் என்பது; இரண்டாவது, விவசாயிகளின் துணைத் தொழிலாக நெசவு ஆக வேண்டும்; அதன்மூலம் அவர்களின் வாழ்வு மேம்பட வேண்டும் என்பது.

விவசாயத்தை அடுத்து நெசவுத் தொழிலே இந்தியாவில் பெரிய தொழிலாக இருந்தது. இங்கிலாந்து நாட்டில் உற்பத்தி ஆகிற ஆடைகளைக் கொண்டுவந்து இந்தியா முழுவதும் ஆங்கிலேயர்கள் விற்பனை செய்த காரணத்தால், பல லட்சக்கணக்கான இந்திய நெசவாளர்கள் வாழ்க்கை கேள்விக்குறியானது. காந்தியடிகளுக்கு நெசவாளர் துயரம் நன்றாக விளங்கியது.

கோட்–சூட் அணிந்த நவ நாகரிக மனிதராக தென் ஆப்ரிக்காவிலிருந்து தாயகம் திரும்பிய காந்தியை இப்படி சுதேசி முழக்கம் எழுப்ப வைத்தது

தென்னிந்தியா. 1921ம் ஆண்டு செப்டம்பர் 20, 21, 22 ஆகிய தேதிகளில் அவர் மேற்கொண்ட மதுரைப் பயணம்தான், ஒற்றை வேட்டியை மகாத்மாவின் அடையாளம் ஆக்கியது.




மதுரையில் தங்கிய அவர், சுற்றியுள்ள கிராமங்களுக்குச் சென்று ஏழை மக்களின் வாழ்வை தரிசித்தார். பலரும் உடுத்த சரியான ஆடையின்றி வறுமையில் வாடுவதைக் கண்டார். 'ஒரு துணிக்கும் அதிகமாக இரண்டாவது துணி வாங்கவும் இயலாத நிலையில் நாட்டில் பெரும்பான்மை மக்கள் இருக்க, தனக்கு மட்டும் ஏன் இந்த ஆடம்பரம்' என அவருக்குள் உறுத்தல் எழுந்தது.

செப்டம்பர் 22ம் தேதி பொதுக்கூட்டத்தில் உரையாற்ற வந்தபோது இடுப்பில் ஒற்றை வேட்டி அணிந்து, மேலே சட்டை ஏதும் அணியாமல் மேடையில் தோன்றினார். அந்த இடம் இப்போது காந்தி பொட்டல் என அழைக்கப்படுகிறது. அங்கே காந்திக்கு சிலை வைத்து, 'மகாத்மா காந்தி வேஷ்டியுடன் முதன்முதலில் உரையாற்றிய இடம்' என பீடத்தில் எழுதி வைத்திருக்கிறார்கள்.

'சுதேசி என்பது நம் தேவைகளுக்குப் போதுமான துணியை நாமே உற்பத்தி செய்வதாகும். 200 ஆண்டுகளுக்கு முன் இந்தியப் பெண்கள் உள்நாட்டுத் தேவைக்கு மட்டுமின்றி வெளிநாடுகளின் கிராக்கிக்காகவும் நூல் நூற்றார்கள். நமது முன்னோர்கள் நூற்றது போன்ற மெல்லிய நூலை எந்த இயந்திரமும் இன்று வரை நூற்க முடியவில்லை. அப்போது நம்முடைய துணி அனைத்தையும் நாமே உற்பத்தி செய்தோம். நமது பெண்கள் நேர்த்தியான நூல் நூற்றார்கள். அதன் மூலம் கணவருக்கு துணை வருமானம் தேடித் தந்தார்கள். கிராமத்து நெசவாளர்கள் அந்த நூலை நெய்தார்கள். இன்று கோடிக்கணக்கான மக்கள் கட்டாயமாக சோம்பி இருப்பதால் நாடு வறுமையடைந்துவிட்டது' என நூறு ஆண்டுகளுக்கு முன்பு வருத்தத்தோடு சொன்னார் காந்தி. இந்த நிலையை அவர் மாற்ற முயன்றார்.

1921ம் ஆண்டு பிரிட்டிஷ் பொருட்களை புறக்கணிப்பதற்காக காந்தியின் தலைமையில் டெல்லியில் விலையுயர்ந்த ஆடைகள் தீயில் எரிக்கப்பட்டன. அதைப் பார்த்து வேதனைப்பட்ட காந்தியின் ஆங்கிலேயே நண்பர் சி.எஃப்.ஆண்ட்ரூஸ், "எரிப்பதற்கு பதிலாக ஏன் இவற்றை ஏழைகளுக்குக் கொடுக்கக்கூடாது?" என்று கேட்டார். அதற்கு காந்தி, "எங்கள் ஏழைகளுக்குக்கூட தன்மானம் உண்டு" என்றார்.

நம் சுதேசி தன்மானத்தின் அடையாளம், வேட்டி.




# நிம்மதிக்கு ஐந்து வழிகள்!

வாழ்வை எளிதாக்கும் ஏராளமான கருவிகள் வந்துவிட்டாலும், இன்றைய தலைமுறை நிம்மதியை இழந்து நிற்கிறது. அந்த நிம்மதியை அடைவதற்கு காந்தி சொல்லும் ஐந்து வழிகள்:

**உங்களுக்குள் தேடுங்கள்:** ‘உங்கள் மகிழ்ச்சியை உங்களைத் தவிர வேறு யாராலும் சீர்குலைக்க முடியாது’ என்பது காந்தியடிகளின் மிக உன்னதமான போதனை. நிம்மதியைத் தேடி பலரும் எங்கெங்கோ ஓடுகிறார்கள். எந்தெந்த பானங்களிலோ அது கிடைக்கும் என நம்புகிறார்கள். ஆனால், ஆரவாரமான கூட்டங்களுக்கு மத்தியிலும் அவரால் அமைதியில் தவழ முடிந்தது; கொந்தளிப்பான தருணங்களிலும் முகத்தில் புன்னகை ஏந்த முடிந்தது. மகிழ்ச்சி, துன்பம், நிம்மதி, சலனம் எல்லாமே வெறும் உணர்வுகள்தான். அவை எல்லாமே நமக்குள்ளிருந்தே வெளிப்படுகின்றன. ‘நான் நிம்மதியாக இருப்பேன்’ என ஒருவர் தீர்மானித்துவிட்டால், வெளி சக்தி எதனாலும் அந்த நிம்மதியை ஒன்றும் செய்ய முடியாது.

**இன்றைய தினத்தில் வாழுங்கள்:** பலரும் நேற்றைய தவறுகளுக்காக இன்று வருந்திக் கிடக்கிறார்கள். சிலர் நாளைய பிரச்னைகளை நினைத்து இன்று துயரத்தில் மூழ்கிக் கிடக்கிறார்கள். இன்றைய நாளில் மகிழ்ச்சியாக வாழ்வது பற்றி யோசிப்பதில்லை. தணிந்து பொழியும் நிலவின் குளிர்ச்சியை, அதிகாலை அமைதியில் பறவைகள் ஓசையை, எதிர்ப்படும் குழந்தையின் களங்கமற்ற புன்சிரிப்பை, தெருமுனை டீக்கடை ரேடியோவில் ஒலிக்கும் இனிமையான பாடலை... இப்படி எதையும் ரசித்து சந்தோஷம் அடையாமல், நேற்றிலும் நாளையிலும் வாழ்வது சரியல்ல! அதேபோல, இருக்கும் எல்லா வேலைகளையும் அப்படியே போட்டுவிட்டு ஏதாவது காரணம் தேடிக்கொண்டு பார்ட்டி, கொண்டாட்டங்களில் மூழ்குவதும் முறையல்ல. ஒவ்வொரு நிமிடத்தையும் ரசித்து வாழுங்கள்.

**மாற்றுவதற்கு முன்பு மாறுங்கள்:** மற்றவர்களைக் குறை சொல்வது சுலபம். ‘இந்த ஊரே சரியில்லை’, ‘அரசாங்கம் மோசம்’, ‘பக்கத்து வீட்டுக்காரன் பொறாமைக்காரன்’ என எல்லோரையும் குறை சொல்லி, தவறுகளுக்கும் தாமதங்களுக்கும் அவர்களைப் பொறுப்பாக்கிவிடலாம். சிலர் எல்லாவற்றையும் மாற்றத் துடிக்கலாம். ஆனால், ‘அப்படி மாற்ற நினைப்பதற்கு முன்பாக நீங்கள் மாறுங்கள்’ என்கிறார் காந்தி. உங்களால் மட்டுமே உலகை மாற்ற முடியும் என நம்புங்கள். நீங்கள் காண விரும்பும் மாற்றமாக நீங்கள் மாறுங்கள். கொஞ்சம் கொஞ்சமாக இந்த உலகம் நல்ல இடமாக உங்களுக்குத் தெரியத் தொடங்கும்.



**மன்னிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்:** ‘தண்டிப்பதற்கு அல்ல, மன்னிப்பதற்கே அதிக பலம் தேவைப்படுகிறது’ என்பார் காந்தி. மன்னிப்பது உங்களை இன்னும் வலிமையாக்கும். வன்மத்தையும் பழி உணர்வையும் வளர்த்துக்கொள்பவர்களை விட, மன்னிக்கும் குணத்தை கொண்டவர்களே வலிமையானவர்களாக இருப்பார்கள். அடுத்தவர்களை நீங்கள் மன்னிக்க வேண்டுமென்றால், வலுவான மதிப்புகளைக் கொண்ட மனிதராக நீங்கள் இருக்க வேண்டும். விறகில் பற்றிய நெருப்பு தொடுபவர்களை லேசாகத்தான் சுடும். ஆனால் விறகை எரித்து சாம்பலாக்கிவிடும். அதுபோல உங்களுக்குள் எழும் கோபமும் ஆங்காரமும் அடுத்தவர்களைவிட உங்களையே அதிகம் பாதிக்கும். மன்னிக்கவும் மறக்கவும் பழகுங்கள். காந்திஜி சொன்னது போல, ‘கண்ணுக்குக் கண் என தண்டித்துக் கொண்டிருந்தால் இந்த உலகமே குருடர்களால் நிறைந்திருக்கும்!’

**தெரியாததைக் கேளுங்கள்:** லண்டனில் படித்து பாரிஸ்டர் பட்டம் பெற்று, தென் ஆப்ரிக்காவில் வழக்கறிஞர் தொழில் செய்யப் போனார் காந்தி. தாதா அப்துல்லா என்பவருக்காக அவர் வாதாட வேண்டும். அப்துல்லாவின் செயலாளர் வழக்கை காந்திக்கு விவரித்தார். ‘பிராமிசரி நோட்’ என்பதை பி.என் என சுருக்கமாகச் சொல்வார்கள். இது பொதுவாக வழக்கறிஞர்களுக்குத் தெரியும். அந்த செயலாளர் அப்படிச் சொல்ல, “பி.என் என்றால் என்ன?” எனக் கேட்டார் காந்தி. “இதுகூடத் தெரியவில்லை. நீங்கள் என்ன வக்கீலோ?” என கிண்டல் செய்தார் செயலாளர். “தெரியாததைத் தெரியாது என்றுதானே சொல்ல வேண்டும்” என்றார் காந்தி. அந்த நேர்மையும் கற்றுக்கொள்ளும் ஆர்வமுமே அவரை அங்கு வெற்றிகரமான வழக்கறிஞர் ஆக்கின. தெரியாததைக் கற்றுக்கொண்டால், குழப்பம் தொலைந்து நிம்மதி பிறக்கும்.



# காந்தி எனும் அதிசயம்

**மகாத்மா காந்தியே ஒரு அதிசயம். அவரது வாழ்வில் நிகழ்ந்த பல விஷயங்கள் அபூர்வமானவை; அதிசயமானவை. அவரோடு பழகிய பலர் தந்திருக்கும் அந்த விஷயங்கள் இங்கே...**

- *உலகின் நான்கு கண்டங்களில் இருக்கும் 12 நாடுகளில் மக்கள் விடுதலைப் போராட்டம் நடத்துவதற்கு மகாத்மா காந்தி உந்துசக்தியாக இருந்திருக்கிறார்.*
- *இரண்டாம் உலகப் போருக்கு முன்பாக ஹிட்லருக்கு மகாத்மா ஒரு கடிதம் எழுதினார். 'மனிதகுலத்தை துன்பத்தில் ஆழ்த்தப் போகும் போரைத் தடுக்க உங்கள் ஒருவரால் மட்டுமே முடியும். போரில் நீங்கள் அடையப் போகும் வெற்றிக்கு இதுதான் விலையா?' எனக் கேள்வி எழுப்பியிருந்தார் காந்தி.*
- *இந்தியா சுதந்திரம் அடைந்த 1947 ஆகஸ்ட் 15ம் தேதி, பிரதமர் நேரு கொண்டாட்டங்களுக்கு நடுவே உரையாற்றினார். அப்போது காந்தி டெல்லியில் இல்லை. மதக் கலவரங்களைத் தடுக்க கொல்கத்தாவில் உண்ணாவிரதம் இருந்தார்.*
- *மகாத்மா மீது பற்று கொண்டவர், 'ஆப்பிள்' நிறுவனத் தலைவர் ஸ்டீவ் ஜாப்ஸ். அதனாலேயே காந்தி போல வட்டக் கண்ணாடி அணிந்தார் அவர்.*
- *மகாத்மாவின் சுயசரிதை நூலான 'சத்தியசோதனை', 1920ம் ஆண்டு வரை அவர் வாழ்வில் நிகழ்ந்த தகவல்களைக் கொண்டது. அதன்பின் அவரது பொதுவாழ்க்கை திறந்த புத்தகம் என்பதால், எதையும் அவர் எழுதவில்லை.*
- *'சத்திய சோதனை' 1927ம் ஆண்டு வெளியானது. உலகின் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட அந்த நூல், கடந்த நூற்றாண்டின் முக்கியமான 100 புத்தங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.*

❖ நம் ரூபாய் நோட்டுகளில் புன்சிரிப்போடு காந்தி வாழ்கிறார். 1946ம் ஆண்டில், இந்தியா மற்றும் பர்மாவுக்கான பிரிட்டிஷ் செயலாளர் பிரடெரிக் வில்லியம் பெதிக் லாரன்ஸுடன் கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட காந்தி புகைப்படமே இந்தியக் கரன்சிகளில் இப்போதும் பயன்படுகிறது.

❖ காந்திஜி இரண்டு விஷயங்களுக்கு வாழ்நாளில் வருந்துவதுண்டு. ஒன்று, அவருடைய கையெழுத்து கிறுக்கலாக இருக்கிறதே என்பதற்காக! இன்னொன்று, எப்போதும் யாரையாவது உடம்பைப் பிடித்து விடச் சொல்வது. அதாவது, மசாஜ் செய்து கொள்வதைத் தனது கெட்ட பழக்கமாக காந்தி குறிப்பிட்டார்.

❖ காந்தியின் வாழ்வில் பல சம்பவங்கள் நிகழ்ந்தது வெள்ளிக்கிழமையில்! அவர் பிறந்ததும், மறைந்ததும், இந்தியா விடுதலை பெற்றதும் வெள்ளிக்கிழமையில்தான்.

❖ தென் ஆப்ரிக்காவில் இருந்த காலத்தில் அவரின் ஆண்டு வருமானம், 15,000 டாலர்கள். நாட்டிலேயே அதிகம் சம்பாதிக்கும் வழக்கறிஞர்களில் ஒருவராக அவர் இருந்தார்.

❖ லியோ டால்ஸ்டாய், ஜான் ரஸ்கின், தோரோ முதலானோரின் நூல்களும் தத்துவங்களும் காந்திஜிக்கு வழிகாட்டிகளாக இருந்தன.

❖ தென் ஆப்ரிக்காவில் காந்தி பத்திரிகை ஆசிரியர் ஆனார். 'இந்தியன் ஒப்பீனியன்' என்ற பெயரில் அவர் ஆரம்பித்த பத்திரிகையில் குஜராத்தி, இந்தி, ஆங்கிலம், தமிழ் ஆகிய நான்கு மொழிகளும் இடம்பெற்றன.

❖ காந்திக்கு அபாரமான நோய் எதிர்ப்பு சக்தி இருந்தது. தென் ஆப்ரிக்காவில் கடுமையான பிளேக் பரவிய காலத்தில், நோய் பாதித்த சுரங்கத் தொழிலாளர்களுக்கு பணிவிடை செய்த நர்ஸ்கள் பலரே நோய் பாதித்து இறந்தனர். ஆனால் நோயாளிகளுக்கு இடையே எப்போதும் இருந்த காந்தியை நோய்த் தொற்றுகள் ஏதும் பாதித்ததில்லை.

❖ காந்திஜி பயன்படுத்திய பல பொருட்கள் தனி நபர்கள் சிலரிடம் பொக்கிஷமாக உள்ளன. இப்படி ஒருவர் வைத்திருந்த மகாத்மா பயன்படுத்திய சர்க்காவும், அவரது கடைசி உயிலும் 2013ம் ஆண்டு லண்டனில் ஏலத்தில் விடப்பட்டன. இதில் அவரது சர்க்கா சுமார் ஒரு கோடி ரூபாய்க்கும், உயில் 18 லட்ச ரூபாய்க்கும் ஏலம் போனது. அரசு முயற்சி எடுத்திருந்தால் இவை இந்தியா வந்திருக்கும்.

❖ உலகம் போற்றிய விஞ்ஞானி ஐன்ஸ்டீனும் காந்தியும் கடிதங்கள் மூலமே நண்பர்கள் ஆனவர்கள். காந்திஜி மறைந்தபோது ஐன்ஸ்டீன் பெரும் வருத்தம் அடைந்தார். 'மானுட குலத்தின் மேன்மையான வருங்காலத்தை எண்ணி கவலையுறும் ஒவ்வொரு மனிதனையும் காந்தியின் மரணம் ஆழமாக அசைத்துவிட்டது' என ஐன்ஸ்டீன் எழுதியிருந்தார்.



# நம்பிக்கை இழக்காதீர்கள்!

சின்னச் சின்ன தோல்விகளுக்கே நம்பிக்கை இழந்து துவண்டு போகிறார்கள் பலர். ஆனால், இருள் குகையில் நம்பிக்கை தீபத்தை ஏந்தி நீண்ட பயணம் செய்தவர் காந்தி. அவரின் தென் ஆப்பிரிக்க வாழ்க்கை எவருக்கும் நம்பிக்கை தருவது. அங்கு இந்தியர்களின் உரிமைக்காக காந்தி போராடினார். ‘மன மாற்றமே உண்மையான மாற்றத்தை உருவாக்கும்’ என்று அவர் நம்பினார். தான் யாரை எதிர்க்கிறோமோ, அவர்களையும் நம்பினார்.

தென் ஆப்ரிக்காவுக்கு வழக்கறிஞர் பணி செய்யச் சென்றபோது, இந்திய அடையாளமாக தலையில் தலைப்பாகை வைத்துக்கொண்டார் காந்தி. அந்த தலைப்பாகையுடன் முதல் நாள் நீதிமன்றத்திற்கு பார்வையாளராக வருகிறார் காந்தி. நீதிமன்ற மரபை மீறிவிட்டதாகக் கருதினார் நீதிபதி. காந்தியிடம், “தலைப்பாகையைக் கழற்றி வைக்க வேண்டும். அல்லது நீதிமன்றத்தை விட்டு வெளியேற வேண்டும்” என ஆணையிடுகிறார். தலைப்பாகையைக் கழற்ற மறுத்து காந்தி வெளியேறினார். அதே நீதிமன்றத்தில் வக்கீலாகப் பணியாற்ற வரும்போது, அரசாங்கத்தின் உடை விதிகளுக்கு கட்டுப்பட்டு தலைப்பாகையை கழற்றிவிடுகிறார். ‘அன்றைக்கு நான் வெறும் பார்வையாளன். தலைப்பாகை அணிவது எனது உரிமை. ஆனால் இன்றைக்கு அரசாங்கத்தின் ஊழியன். அதன் சட்டங்களை மதிப்பதுதான் சரியானது’ என்றார்.

தென் ஆப்ரிக்காவில் வசிக்கும் இந்தியர்கள் அனைவரும் கட்டாயம் தங்கள் பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும், தங்கள் பத்து விரல் ரேகைகளையும் பதியவேண்டும் என அரசு ஒரு சட்டம் இயற்றியது. காந்தி இதை எதிர்த்து போராடினார். “இந்த சட்டம் கட்டாயம் இல்லை என்றானவுடன் நானே முதல் ஆளாக வந்து ரேகைகளைப் பதிந்துகொள்கிறேன்” என்று அரசுடன் நடந்த பேச்சுவார்த்தையில் காந்தி உறுதியளித்தார்.



ஆனால் மற்றவர்கள் இதை எதிர்த்தனர். இப்படி கைரேகையைப் பதிவு செய்துகொள்ள சென்ற காந்தியை ஒரு கும்பல் வழிமறித்து தாக்கியது. அதில் மீர் ஆலம் என்பவன் காந்தியின் மீது மிகுந்த மரியாதை கொண்டவன். ஆனாலும் அவன்தான் அவரை அதிகம் தாக்கினான். காந்தி சிறிது நேரத்திலேயே நிலைகுலைந்தார். மயக்கமுறும் நிலையில், 'ஹே ராம்' என்று கூறிக்கொண்டே மண்ணில் சாய்ந்தார். பிறகு மயக்கம் தெளிந்த காந்தி முதலில் சொன்னது, "மீர் ஆலம் உட்பட யாரையும் தண்டிக்கக்கூடாது" என்பதைத்தான். இந்த விஷயத்தை கேள்விப்பட்ட மிர் ஆலம் மனம் மாறினான்.

கொஞ்ச நாளில் ஜோகன்னஸ்பர்க் நகரில் காந்தி பங்கேற்ற ஒரு கூட்டத்தில் அவரைத் தாக்க சிலர் சதித்திட்டம் தீட்டினர். கூட்டத்தில் திடீரென்று விளக்குகள் அணைகின்றன. பலரும் காந்தியைச் சூழ்ந்து தாக்க முயன்றபோது, ஒரு குரல் ஓங்கி ஒலித்தது. "யாராவது காந்தியைத் தாக்க முயற்சித்தால், அவர் உடலில் உயிர் இருக்காது" என்று முழக்கமிட்டது மீர் ஆலம்தான். அவனும் அவன் நண்பர்களும் காந்திக்கு பாதுகாப்பு வளையம் அமைத்துக் காப்பாற்றினர்.

தென் ஆப்ரிக்காவில் காந்தி சிறை வாசமும் சித்திரவதைகளும் அனுபவிக்கக் காரணமாக இருந்தவர், ஜெனரல் ஸ்மட்ஸ் என்ற முரட்டு போலீஸ் அதிகாரி. காந்தியின் பிரதான எதிரியாக அவரைச் சொல்வார்கள். ஒருமுறை இப்படி சிறையில் இருந்த நேரத்தில், காந்தி ஒரு ஜோடி செருப்பு தைத்து அவற்றை ஜெனரல் ஸ்மட்ஸுக்கு அனுப்பி வைத்தார். காந்தி மறைந்ததும் ஜெனரல் ஸ்மட்ஸ் அவற்றை காந்தி அருங்காட்சியகத்துக்கு அனுப்பி வைத்தார். "என்னை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தபோது அவர் சிறையில் தன் கைகளால் செய்த இந்த செருப்புகளை எனக்கு அனுப்பி வைத்திருந்தார். சில நாட்கள் மட்டுமே நான் அவற்றை அணிந்தேன். மிகவும் மதிப்புமிக்க ஒரு பொருளை காலடியில் போட்டு மிதிப்பது போன்ற குற்ற உணர்வு தோன்றியது. உடனே அவற்றை பத்திரமாக எடுத்து வைத்தேன். அவற்றை என் வாழ்நாள் முழுதும் பாதுகாத்து வைத்திருந்து, இப்போது காந்தி அருங்காட்சியகத்துக்கு அனுப்பி வைக்கிறேன்" என்று எழுதினார் ஸ்மட்ஸ். நம்பிக்கையுடன் தரும் பரிசு, மோசமான எதிரியையும் பாசமான நண்பர் ஆக்கும் என மகாத்மா வாழ்ந்து காட்டியிருக்கிறார்.



# காந்தி பொன்மொழிகள்

- குறிக்கோளை அடையும் முயற்சியில்தான் மகிமை இருக்கிறது. அந்தக் குறிக்கோளை அடைவதில் இல்லை.
- திருப்தி முயற்சியில் இருக்கிறது; முழுமையில் அல்ல. முழுமுயற்சிதான் முழுவெற்றி.
- ஒரு டன் அளவுக்கு போதனை செய்வதை விட ஒரு துளி அளவு பின்பற்றுதலே சிறந்தது.
- ஒருவன் தான் மேற்கொள்ளும் செயலின் முடிவை அறிந்துகொள்வதில் கவலையாக இருந்தால், அவனுக்கு தடைகளும் எதிர்ப்புகளும்தான் அதிகம் தென்படும்.
- மகிழ்ச்சியற்ற நிலையில் மேற்கொள்ளும் எந்தச் செயலும், அதைப் பெறுபவருக்கோ வழங்கும் நமக்கோ எந்தப் பயனும் அளிக்காது.
- உழைப்பவர்கள் கையில்தான் உலகம் இருக்கிறது. பிறர் உழைப்பில் வாழ்பவர்கள் ஒருநாளும் முன்னேற முடியாது.
- பலம் உடல் திறனால் அமைந்ததல்ல. மாறாக, அசைக்க முடியாத மனஉறுதியிலிருந்து வெளிப்படுவது.
- நேரான பாதையிலிருந்து விலகியவன் ஒருபோதும் தன் இலக்கை அடைய மாட்டான்.
- நீங்கள் எதைச் செய்தாலும் உங்கள் உள்ளத்திற்கும் உலகத்திற்கும் உண்மையாகவே நடந்து கொள்ளுங்கள்.
- உன் எதிர்காலம், உன் இன்றைய செயலைப் பொருத்தது.
- பொறுமையும் விடாமுயற்சியும் இருந்தால், சிரமங்கள் எனும் மலையை வென்று விடலாம்.
- தோல்வி மனச் சோர்வைத் தருவதில்லை. மாறாக, ஊக்கத்தையே தருகிறது.
- பலம் உங்கள் உடலில் இருந்து வருவதில்லை. அது உங்கள் மனதில் இருந்து பிறப்பது!

❖ நாம் செல்லும் பாதை நல்லதாக இருந்தால், நம்முடைய இலக்கும் தானாகவே நல்லதாகி விடும்.
❖ கடமையை முன்னிட்டு செய்த செயல்களுக்கு வெகுமதியை எதிர்பார்க்கக்கூடாது.
❖ செயலில் கெட்டவரை விட மனதில் கெட்டவரே மிகவும் கெட்டவர்.
❖ உடலின் வீரத்தை விட உள்ளத்தின் வீரம் மிக உயர்வானது.
❖ தற்பெருமை எங்கு முடிவடைகிறதோ, அங்குதான் ஒழுக்கம் தொடங்குகிறது.
❖ தவறுகளை ஒப்புக் கொள்ள மறுப்பதை விட பெரிய அவமானம் எதுவுமில்லை.
❖ மயக்கம் உண்டாகும்போது அறிவு பயன்படாது. நம்பிக்கை ஒன்றுதான் நம்மைக் காப்பாற்ற முடியும்.
❖ உயர்ந்த எண்ணங்களை உடையவர்கள் ஒருநாளும் தனித்து விடப்பட்ட மாட்டார்கள்.
❖ பெரிய அளவில் நாம் எதையும் சாதித்திருந்தால் அந்த சாதனைக்குப் பின்னால் திடமான, இரும்பு போன்ற ஒழுக்கம் கட்டாயம் இருந்திருக்கும். வெறும் கல்வியால் மட்டும் ஒழுக்கம் வந்துவிடாது. துன்பம் என்ற பள்ளியில் படிக்கும் பாடம்தான் ஒழுக்கம்.
❖ தன் சக மனிதனின் முன்னேற்றத்திற்காக பாடுபடுபவனே சிறந்தவனாகக் கருதப்படுகிறான்.
❖ பிரச்னைகளிலிருந்து தப்பிக்க வேண்டுமானால், தவறான விஷயங்களுக்கு 'ஆம்' என்று தலையாட்டுவதை விட 'இல்லை' என்று மறுப்பு சொல்வதே சிறந்தது.
❖ எதிர்காலத்தை அறிவது நம் நோக்கமல்ல. நிகழ்காலத்தில் நாம் எப்படிச் செயலாற்றுகிறோம் என்பதுதான் முக்கியம்.
❖ குறிக்கோளில் உறுதியாக இருப்பவர்கள் விவாதம் செய்ய மாட்டார்கள். வெற்றி கிட்டுமா என்ற சந்தேகம் அவர்களுக்கு இருக்காது. கொடுக்கப்பட்ட பணியை, நம்பிக்கையுடன் செய்வார்கள். வெற்றியோ, தோல்வியோ வருந்த மாட்டார்கள். அதுபோலவே அனைவரும் செயலாற்ற வேண்டும்.
❖ லட்சியத்தில் சுயநலமின்றி ஈடுபட்டால் எல்லோருடைய கவனத்தையும் கவர்வீர்கள்.
❖ சந்தேகம் எனும் காயத்தை விவாதங்களாலும் விளக்கங்களாலும் குணப்படுத்த முடியாது.
❖ ஒரு மனிதனுக்கு அளிக்கக்கூடிய கடுமையான தண்டனை, அவனால் புரிந்து கொள்ள இயலாத ஒரு செயலை கட்டாயப்படுத்தி செய்யச் சொல்வதுதான்.
❖ மனம் உடலில்தான் இருந்தாலும் அதற்கு அதிக திருப்தியைக் கொடுத்துவிட்டால் அது பலம் இழந்துவிடும். திருப்தி அடையாத மனமே வலுவுடன் அடுத்தடுத்து செயல்களில் ஈடுபடும்.
❖ தீமை வேறு, தீமை செய்பவன் வேறு என்ற பாகுபாட்டை ஒரு போதும் மறக்கக் கூடாது.



# குழந்தைகளை நேசித்த மகாத்மா!

காந்தியின் இதயம் ஒரு குழந்தையின் இதயம் போல் மென்மையானது. அவர் ஒரு கபடமில்லாத குழந்தையைப் போலிருந்தார். குழந்தைகளை அவர் மிகவும் நேசித்தார். இந்திய விடுதலைக்காக ஏராளமாக எழுதியதைப் போலவே குழந்தைகளுக்கும் அவர் கடிதங்கள் எழுதினார். 'பிறருக்குத் தெரியாததை நீங்கள் கற்றுக் கொடுக்க வேண்டும். நீங்களும் புதிதாகக் கற்றுக் கொள்ள வேண்டும்' என்று அவர் குழந்தைகளுக்கு அறிவுறுத்தினார்.

தென் ஆப்பிரிக்காவில் இருந்தபோது காந்தி ஃபீனிக்ஸ் என்ற பண்ணையை உருவாக்கினார். பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் அங்கு ஒரே சமூகமாக இணைந்து வாழ்ந்தனர். இந்த வாழ்வியல் முறையால் குழந்தைகளின் ஆளுமை எவ்வாறு வளர்ச்சியடைகிறது என்பதை அவர் கவனித்தார். கிட்டத்தட்ட கூட்டுக் குடும்ப வாழ்வின் உன்னத அனுபவத்தை அவர் குழந்தைகளுக்கு அளித்தார். அங்கிருந்த குழந்தைகளுடன் நேரத்தை செலவிட்டு பாடம் எடுப்பார். கதைகள் கூறுவார். 'குழந்தைகளுக்குத் தேவை கண்டிப்பும், நெறிமுறைகளும் அல்ல சுதந்திரமான சூழல் மட்டுமே' என்றார் காந்தி.

உண்மை பேசுவது, தவறுகளை உணர்வது, கீழ்ப்படிதல், பெற்றோரைப் போற்றுவது, பகுத்தறிந்து வாழ்வது, கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவது, அன்பு, மனிதாபிமானம், சகிப்புத்தன்மை, மன்னிக்கும் மனப்பாங்கு என பல விஷயங்களை அவர் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார். தன் வாழ்க்கை மூலம் தொடர்ந்தும் கற்றுத் தருகிறார்.

காந்தியின் வாழ்வில் குழந்தைகளுடனான இரண்டு அனுபவங்கள் முக்கியமானவை. காந்தியின் சபர்மதி ஆசிரமத்தில் இளைஞர் ஒருவர் தொண்டு செய்வதற்காக வந்து தங்கியிருந்தார். குழந்தைகளிடம் அவர் நெருக்கமாகிவிட்டார். ஒரு நாள் அவர் எட்டு வயதுப் பெண் குழந்தைக்கு வேடிக்கை காண்பித்துக் கொண்டிருந்தார். அவர் கையில் எலுமிச்சைப் பழம் ஒன்று இருந்தது. அதை அந்தக் குழந்தை எடுத்துக்கொள்ள

முயன்றாள். அவர் கையை மேலும் கீழும் நகர்த்தி, குழந்தைக்குப் போக்குக் காட்டினார். அவள் அதைப் பிடுங்குவதற்கு எத்தனித்தாள். முடியவில்லை என்பதால் அழ ஆரம்பித்துவிட்டாள். அது ஒரு நோயாளிக்காக வாங்கி வந்தது. குழந்தையிடம் தர முடியாது என்பதால், அவர் சாமர்த்தியமாக கைகளைச் சுழற்றி, "நான் பழத்தை ஆற்றில் வீசிவிட்டேன்" என்றார்.

ஆனால், சாமர்த்தியமாக அதைத் தன் சட்டைப்பையில் மறைத்து வைத்துக்கொண்டார். குழந்தை ஏமாற்றத்தை மறந்து அவருடன் பேசியபடி ஆசிரமம் திரும்புகிறாள். அப்போது அந்த இளைஞர் தன் கைக்குட்டையை பையிலிருந்து எடுக்கும்போது எலுமிச்சை பழம் கீழே விழுந்து விட்டது.

இதைப் பார்த்து குழந்தை, "நீங்கள் என்னிடம் பொய் பேசினீர்களா? பையில் பழத்தை மறைத்து வைத்துக்கொண்டு, ஆற்றில் போட்டுவிட்டேன் என்றீர்களே! நீங்கள் பொய் பேசுபவர் என்று காந்திஜியிடம் சொல்வேன்" என்றாள். அதேபோல சொல்லியும் விட்டாள். காந்தி அந்த இளைஞரைக் கண்டித்தார். "விளையாட்டாக செய்தாலும், குழந்தைகள் விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். குழந்தைகளிடம் கேலியாகக்கூட பொய் பேசிவிடக்கூடாது. சிரிப்பும் குதூகலத்தோடும் ஆரம்பமாகும் இந்த சிறுவிஷயம் பின் வழக்கமாகவே ஆகிவிடக்கூடும்" என அறிவுரை கூறினார்.



இன்னொரு சம்பவம். சாரதா தேவி என்ற ஆசிரியை, தன் மகனை அழைத்துக்கொண்டு காந்திஜியைப் பார்க்கச் சென்றார். காந்திஜி ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். பக்கத்திலேயே பனை ஓலை விசிறி ஒன்று இருந்தது. சாரதா தேவியின் மகனைப் பார்த்து, விசிறியை எடுக்குமாறு காந்திஜி ஜாடை செய்தார். புரிந்துகொண்ட பையன் விசிறியை எடுத்து அவருக்கு விசிற ஆரம்பித்தான்.

குளிர்ந்த காற்று வீசினவுடன் காந்திஜிக்கு லேசாகத் தூக்கம் வர ஆரம்பித்தது. அப்படியே பின்னாலிருந்த மெத்தையில் சாய்ந்தார். இதைப் பார்த்து சாரதாதேவி பையனிடமிருந்த விசிறியை வாங்கி தானே விசிற ஆரம்பித்தார். காந்திஜி உடனே விழித்துக்கொண்டார். சாரதாதேவியின் பக்கம் பார்த்தார். "மகன் வேலை செய்வதை பார்த்ததும் தாயன்பு தடுக்கிறது. பையன் களைத்துப் போய்விடுவான் என்ற கவலையா?" என்று கேட்டார் காந்தி.

"குழந்தைகள் புதிதாகக் கற்றுக்கொள்வதை தாயன்பு பல நேரங்களில் தடுத்துவிடும். தாயன்பு குழந்தைக்குத் தன்னம்பிக்கையை வளர்க்காது" என்றும் அறிவுரை சொன்னார்.




# வார்த்தையும் வாழ்வும் வேறில்லை!

‘காந்தி எதனால் ஜெயித்தார்’ என்ற கேள்விக்கு முதன்மையான பதில், அவரது சொல்லுக்கும் செயலுக்கும் இடையே இடைவெளி கொஞ்சமும் இருக்கவில்லை. ‘காந்தி ஒன்று சொன்னால் அது உண்மைதான்’ என்பதை அவரை எதிர்த்தவர்களும் அறிந்திருந்தார்கள். அவரது வெற்றியைவிட காந்தியின் நேர்மையைப் பொதுமக்கள் போற்றினார்கள். ‘தனிநபர் ஒழுக்கம்’ என்பதன் முழு வடிவமாக அவர் இருந்தார்.

தனக்கான இலக்கை நிர்ணயித்து அதனை நோக்கி நகரும் ஒரு மனிதன், அதில் எவ்வளவு சோதனைகளைச் சந்தித்தாலும் ஒரு போதும் பின் வாங்கக் கூடாது. இதற்கு காந்தி தன் வாழ்க்கையையே உதாரணமாக மாற்றிவிட்டுப் போனார். அவருக்குத் தோள் கொடுத்து நின்ற பல தலைவர்களுக்கே, இந்தியா சுதந்திரம் பெற்றுவிட முடியும் என்ற நம்பிக்கை இல்லை. எத்தனையோ போராட்டங்கள், இழப்புகள், எதைக் கண்டும் ஒருபோதும் அவர் சோர்வடையவில்லை. சுதந்திரம் என்ற இலக்கை நோக்கி நகர்ந்துகொண்டே இருந்தார், வெற்றியும் கண்டார்.

காந்தியிடம் நீங்கள் கற்க வேண்டிய விஷயங்களில் முக்கியமான ஒன்று, ‘எண்ணமே வாழ்க்கை’ என்பது. ஒரு மனிதன் எதைச் சிந்திக்கிறானோ அதைத்தான் எப்போதும் செய்கிறான். ‘ஒருவனுடைய ஆளுமையைத் தீர்மானிப்பது அவனது சிந்தனை’ என்றார் மகாத்மா. நேர்மறையாகச் சிந்திப்பவர்கள் தங்களின் இலக்குகளைச் சுலபமாக அடைவார்கள். எதிர்மறையாகச் சிந்திப்பவர் தன் தோல்வியை எண்ணிச் சோர்ந்து விடுவார்.

அவர் முன்மொழிந்த ஒவ்வொரு சீர்திருத்தத்தையும், பிறருக்கு அவர் சொன்ன ஒவ்வொரு உபதேசத்தையும் முதலில் அவர் தனக்குத்தானே சோதனை செய்து பார்த்தார். அவர் அனைத்தையுமே தன்னிலிருந்து தான்



தொடங்குவார். அவருடைய சொல்லும் செயலும் கச்சிதமாக ஒன்றுக்கு ஒன்று பொருந்தும். அவருடைய வாழ்விலும் செயலிலும் எப்போதுமே ஒருவித முழுமை இருந்தது.

தன் வாழ்வைப் போலவே தான் சாப்பிடும் உணவிலும் அவர் எளிமையாக இருந்தார். குறைவான அளவில் சாப்பிடுவார். ருசியை விரும்பியதில்லை. 'ருசி என்பது எண்ணத்தில் இருக்கிறது. நாவில் இல்லை' என்று சொல்கிறார் காந்தி. எப்போதும் சைவ உணவையே விரும்பினார். ஆரோக்கியமற்ற உணவுகளை அவர் முழுமையாக எதிர்த்தார். இங்கிலாந்தில் இருந்த நாட்களில், தன் தாய்க்கு செய்துகொடுத்த சத்தியத்தை மதித்து சைவ உணவைத் தேடி அலைந்தார். பிறகு காந்தி தானே சமையல் செய்து சாப்பிட்டார். அப்போது அவர் தினமும் கேரட் சூப் செய்து சாப்பிடுவார்.

தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பியதும் நாடு முழுக்க அவர் பயணம் செய்தார். அப்போது அரித்துவார் சென்று, எளிய மக்கள் படும் கஷ்டத்தைக் கண்டார். அன்று முதல் இரவில் சாப்பிடுவதில்லை என்று விரதம் பூண்டார். காந்தியின் உண்ணாவிரதங்கள் புகழ் பெற்றவை. அவை அரசையே அசைத்துவிடும். குடும்பத்தில்கூட தன் மகன்கள் தன் பேச்சைக் கேட்காதபோது அவர் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்.

உலகிலேயே பயங்கரமான ஆயுதம் நாக்கு. சில நிமிடங்கள்கூட பேசாமல் இருப்பது நம்மில் பலருக்கு சாத்தியம் இல்லை. ஆனால், காந்தியடிகள் தன் வாழ்நாள் முழுவதும் திங்கள் கிழமைகளில் மௌன விரதம் இருந்தார். தீவிரமாக அரசியலில் ஈடுபட்டிருந்தபோதுகூட, எவ்வளவு பெரிய மனிதர்களை சந்திக்க வேண்டியிருந்தபோதும்கூட இந்த திங்கள் கிழமை மௌன விரதத்தைக் கைவிட்டதில்லை அவர்.

தன் இறுதிக்காலத்தில் காந்தி மிகுந்த மனவேதனையில் தவித்தார். தேசப் பிரிவினை அவரை மிகவும் பாதித்தது. அந்த நேரத்தில் அவரின் பாதுகாப்புக்கு காவலர்கள் நியமித்ததைக்கூட அவர் தடுத்தார். "என் வாழ்க்கை கடவுளின் கைகளில் இருக்கிறது. நான் இறக்கவேண்டும் என்பது நிச்சயமானால் எந்த ஒரு முன்னடவடிக்கையும் என்னைக் காப்பாற்றாது. யார் ஒருவர் தான் சுதந்திரமாக இருக்க பாதுகாப்பு வேண்டுகிறாரோ, அவர் வாழவே அருகதையற்றவர்" என்று சர்தார் படேலிடம் கூறினார் காந்தி. தனது கடைசி சில நாட்களில் பிரார்த்தனைக் கூட்டங்களில், "நாட்டில் நடக்கும் அசுரத்தனமான கொடுமையைக் காணும் மௌன சாட்சியாக நான் இருக்க விரும்பவில்லை. கடவுள் என்னை எடுத்துக் கொள்ளவேண்டும்" என்று திரும்பத் திரும்பச் சொன்னார். ஒருவேளை கடவுள் அவர் பிரார்த்தனையை ஏற்றிருக்கக்கூடும்.



# காந்தி 10

*1. இந்தியாவில் தெருக்களுக்குப் பெயர் வைக்கப்படுவதில் முதலிடம் பிடிப்பவர் மகாத்மா காந்தியே! நாடு முழுக்க எல்லா பெருநகரங்களிலும் ஒரு முக்கியமான வீதிக்கு காந்தி பெயர் இருக்கும். உலகில் 48 நாடுகளில் காந்தி பெயரில் வீதி உள்ளது.*

*2. காந்தி பிறந்த தினம். 1869ம் ஆண்டு அக்டோபர் 2ம் தேதி குஜராத் மாநிலம் போர்பந்தர் எனும் சிற்றூரில் பிறந்தார். காந்தி பிறந்த அக்டோபர் 2ம் தேதியை உலக அகிம்சை தினமாக ஐ.நா. சபை அறிவித்துள்ளது.*

*3. ‘தீயவற்றைப் பேசாதே, தீயவற்றைக் கேட்காதே, தீயவற்றைப் பார்க்காதே’ என வாழ்வியல் நெறிகளை வலியுறுத்தும்விதமாக வாய்மூடி, காதுகளை அடைத்து, கண்களை மூடிக் காட்சி தரும் 3 குரங்குகள் ‘காந்திஜியின் சிறிய குரங்குகள்’ என அழைக்கப்படும். ‘மூன்று அறிவாளி குரங்குகள்’ என அழைக்கப்படும் இவை ஜப்பானில் புகழ்பெற்றவை. சீனர் ஒருவர் இதை மகாத்மாவுக்குப் பரிசாக அளித்தார்.*

*4. காந்திஜி – கஸ்தூரிபாய் தம்பதிக்கு நான்கு மகன்கள். ஹரிலால் காந்தி, ராம்தாஸ் காந்தி, மணிலால் காந்தி, தேவ்தாஸ் காந்தி. மூத்த மகன்கள் இருவரும் இந்தியாவிலும், அடுத்த இரு மகன்கள் தென் ஆப்ரிக்காவிலும் பிறந்தார்கள்.*

*5. நோபல் அமைதி விருதுக்கு 5 முறை காந்தியின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டது. கடைசியாக 1948ம் ஆண்டு பரிந்துரை செய்யப்பட்டபோது அவருக்கே நோபல் வழங்கப்படும் வாய்ப்பு இருந்தது. ஆனால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டதால் தரப்படவில்லை. மறைந்தவர்களுக்கு நோபல் விருது வழங்கும் வழக்கம் இல்லை. அந்த ஆண்டில் 'தகுதியானவர்கள் யாரும் இல்லை' எனக் கூறி, யாருக்குமே நோபல் அமைதி விருது வழங்கப்படவில்லை. "காந்திஜிக்கு நோபல் விருது வழங்காமல் விட்டது மாபெரும் வரலாற்றுப் பிழை. அவருக்குத் தராததால் இந்த விருது பெருமை இழந்துவிட்டது" என நோபல் கமிட்டி செயலாளர் கெயிர் லுண்டஸ்டாட் சில ஆண்டுகளுக்கு முன்பு சொன்னார்.*

*6. இந்திய சுதந்திரப் போராட்டக் களத்தில் மகாத்மா மொத்தம் 6 ஆண்டுகள், ஐந்து மாதங்கள் சிறை தண்டனை அனுபவித்தார். எளிய வாழ்க்கை வாழ்ந்தவர் என்பதால் அவருக்கு சிறை வாழ்க்கை பெரும் பிரச்னையாக இருக்கவில்லை. சிறை வாழ்வை படிப்பதற்கும் எழுதுவதற்கும் பயன்படுத்திக் கொண்டார்.*

*7. ஒருவரை அழிக்கும் பாவங்கள் என 7 விஷயங்களை காந்தி வலியுறுத்துவார். அவை... உழைக்காமல் சேர்க்கும் செல்வம், மனசாட்சிக்கு விரோதமாகப் பெறும் மகிழ்ச்சி, நற்பண்பு இல்லாத கல்வி, அறநெறி இல்லாத வியாபாரம், மனிதத்தன்மை இல்லாத அறிவியல், தியாகம் இல்லாத வழிபாடு, கொள்கை இல்லாத அரசியல்.*

*8. காந்திஜி மறைந்தபோது அவரது இறுதி யாத்திரையில் லட்சக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். இந்த இறுதி ஊர்வலம் 8 மைல் தூரத்துக்கு நீண்டிருந்தது.*

*9. எந்த பிரிட்டனை அகிம்சைப் போராட்டத்தால் வீழ்த்தி சுதந்திரம் பெற்றாரோ, அந்த பிரிட்டன் தலைநகரம் லண்டனில் பாராளுமன்ற சதுக்கத்தில் மகாத்மா காந்தியின் 9 அடி உயர வெண்கலச் சிலை நிறுவப்பட்டது. சுதந்திரப் போராட்டக் காலத்தில் இடுப்பில் ஒற்றை வேட்டி அணிந்து காந்தி எந்தக் கோலத்தில் பிரிட்டிஷ் மகாராணியை சந்தித்தாரோ, அதே தோற்றத்தில் அவரது இந்தச் சிலை உள்ளது. ஒரு இந்தியருக்கு அங்கு வைக்கப்பட்ட முதல் சிலையும் இதுதான்.*

*10. உலகிலேயே மிக அரிதான ஸ்டாம்ப் எனக் கருதப்படுவது, இந்திய அரசு வெளியிட்ட காந்திஜியின் 10 ரூபாய் சர்வீஸ் ஸ்டாம்ப். வெறும் 100 ஸ்டாம்ப்கள் மட்டுமே வெளியிடப்பட்டன. உலகிலேயே மிகக் குறைவாக அச்சிடப்பட்ட ஸ்டாம்ப் இதுதான். இதில் ஒரு ஸ்டாம்ப் சில ஆண்டுகளுக்குமுன் 92 லட்ச ரூபாய்க்கு ஏலம் போனது. 10 ரூபாய் ஸ்டாம்ப் இவ்வளவு விலை போகக் காரணம், மகாத்மா!*



# காந்தி என்கிற கடவுள்!

'மகான்... காந்தி மகான்' என்று மகாத்மாவைப் பாடுவார்கள். தங்கள் துயரங்களைத் தீர்க்க வரும் எவரையும் கடவுளாகக் கருதுவது இந்தியர்களின் இயல்பு. காந்தியையும் அப்படிக் கடவுளாகவே கருதினர் மக்கள். சாமி ஊர்வலம் வந்தால், வீதியின் இருபக்கங்களிலும் ஆயிரக்கணக்கில் மக்கள் கூடி நின்று கடவுளை வாழ்த்திப் பாடி பரவசத்துடன் வழிபடுவார்கள்.

காந்திக்கு வாழ்நாள் முழுக்க அந்த பாக்கியம் கிடைத்தது. பெரும்பாலும் அவரது பயணங்கள் ரயிலில்தான் இருக்கும். ரயில் போகாத ஊர்களுக்கு காரிலோ, மாட்டு வண்டியிலோ, நடந்தோ பயணம் செய்வார். ரயில் நிலையத்தில் ரயில் நுழையும்போது, அவர் வரும் செய்தியறிந்த மக்கள் ஆயிரக்கணக்கில் காத்திருப்பார்கள். காந்தியின் கழுத்துக்கொள்ளாத அளவுக்கு மாலைகள் விழும். 'மகாத்மா காந்தி கி ஜே' என்ற வாழ்த்தொலி எங்கெங்கும் ஒலிக்கும்.

காந்தி வாழ்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில் அவரை வைத்து புனையப்பட்ட கதைகள் நிறைய. காந்திஜியை கடவுளாகவே நினைத்தவர்கள் நிறைய பேர். காந்தியின் புகைப்படம் பதித்த டாலர்கள், கடவுள் படங்கள் பொறித்த டாலர்கள் போலவே பரபரப்பாக அப்போது விற்றன. அவற்றை வாங்கிக் கழுத்தில் அணிந்துகொண்டால் நோய்கள் தீர்ந்துவிடும் என்று மக்கள் நம்பினார்கள். 'இறந்த குழந்தைக்கு காந்தி உயிர் கொடுத்தார். டாலர் போட்டதால் குழந்தை பிழைத்தது' என்றெல்லாம் கிராமங்களில் பரபரப்பாக பல சம்பவங்கள் நடப்பதுண்டு.

இப்படி கழுத்தில் காந்தி டாலர் அணிந்த வங்காளி ஒருவர் காந்தியை சந்திக்க வந்தார். தனக்கு சில வருடங்களாக பாரிச வாயு பிரச்னை இருந்ததாகவும், இந்த டாலரை அணிந்து தினமும் காந்தியின் நாமத்தை உச்சரித்ததால் நோயிலிருந்து மீண்டதாகவும் காந்தியிடம் சொன்னார் அவர். "உங்களை குணமாக்கியது கடவுள்தான், காந்தி அல்ல" என்று




மறுத்தார் காந்தி. ஆனால், அந்த மனிதர் அதை ஏற்கவில்லை.

ஒருமுறை காந்தி பயணித்துக் கொண்டிருந்த ரயில் ஒரு ரயில் நிலையத்தை நெருங்குகிறது. கூட்டமாக நிறைய பேர் காந்தியைப் பார்க்கும் ஆவலில் அந்தப் பெட்டியில் ஏறுகிறார்கள். அப்போது கூட்ட நெரிசலில், ஓடும் ரயிலின் பெட்டியிலிருந்து தலைக்குப்புற கீழே விழுகிறார் ஒருவர். அவர் ரயிலுக்கு அடியில் சிக்கி இறந்திருப்பார் என்று அனைவரும் அஞ்சுகிறார்கள். ஆனால், சிரித்துக்கொண்டே சிறு காயம் கூட இல்லாமல் எழுந்து நடந்து வருகிறார் அவர். "காந்தி அருகில் இருக்கும்போது எனக்கு ஒன்றும் ஆகாது" என்று பக்திப் பரவசத்துடன் சொன்னார் அவர்.

1948 ஜனவரி 30ம் தேதி காந்தி சுட்டுக் கொல்லப்பட்டபோது, அவர் சுடப்பட்ட இடத்தின் மண்ணை புனிதமாகக் கருதி வீட்டில் வைத்து வழிபடுவதற்காகப் பலரும் அள்ளினார்கள். சில நிமிடங்களில் அந்த இடத்தில் பெரிய பள்ளமே ஏற்பட்டது. உடனடியாக அந்த இடம் நினைவுச் சின்னமாக்கப்பட்டு, போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது.

காந்தியைக் கடவுளாகக் கருதி கோயில் கட்டி வழிபடுவதும் நடக்கிறது. தமிழகத்தின் ஈரோடு மாவட்டத்தில் சொந்தாம்பாளையம் என்ற கிராமத்தில் காந்தி கோயில் உள்ளது. இந்த ஊரைச் சேர்ந்த வையாபுரி என்பவரின் முயற்சியில் 10 லட்ச ரூபாய் செலவில் இது கட்டப்பட்டது. கடந்த 1997ம் ஆண்டு இதற்கு குடமுழுக்கு விழா நடந்தது. இங்கு ஒரு பீடத்தில் காந்தி சிலையும் மற்றொரு பீடத்தில் அன்னை கஸ்தூரி பாய் சிலையும் வைக்கப்பட்டுள்ளன. தினமும் ஒரு அர்ச்சகர் இந்த சிலைகளுக்கு பூஜை செய்கிறார். காந்தி சிலைக்கு அர்ச்சனை செய்யும்போது காந்திஜி பெயரிலுள்ள பூஜை பாடலைப் பாடி அர்ச்சனை செய்கிறார். கஸ்தூரி பாய் சிலைக்கும் கஸ்தூரி பாய் பெயரிலுள்ள அர்ச்சனைப் பாடல்கள் பாடி பூஜை செய்கிறார். அக்டோபர் 2ம் தேதி காந்தி ஜெயந்தி அன்று சிறப்பு பூஜைகள் நடைபெறும். பூஜைகள் முடிந்ததும் பெண்கள் பொங்கல் வைக்கிறார்கள்.



# காந்தி துளிகள்!

- காந்திஜிக்குத் திருமணம் நடந்தபோது அவரது வயது 13. இவர்களுக்குப் பிறந்த முதல் குழந்தை இறந்துபோக, அதிலிருந்து குழந்தைத் திருமணங்களை தீவிரமாக எதிர்த்து வந்தார்.
- காந்தி மருத்துவம் படிக்க விரும்பினார். ஆனால், 'பிரேதப் பரிசோதனையில் பிணங்களை அறுத்துச் சோதிப்பது நம் குடும்ப மரபுக்கு ஆகாது' என அவரது சகோதரர் தடுத்துவிட்டார். காந்தி மருத்துவம் படித்திருந்தால் மகத்தான மருத்துவராக இருந்திருப்பார். அவரது வாழ்க்கை மாறியிருக்கும். ஆனால், இந்தியா மாபெரும் தலைவனை இழந்திருக்கும்.
- காந்தியின் குடும்ப நண்பரான ஜோஷி, 'இங்கிலாந்து போய் மூன்று ஆண்டுகள் சட்டம் படித்துத் திரும்பினால் நல்ல வேலையும் நிறைய சம்பளமும் கிடைக்கும்' என்று வழிகாட்டினார். அந்த யோசனையைக் காந்தியின் குடும்பம் ஏற்றுக் கொண்டது.
- 1930ம் ஆண்டு புகழ்பெற்ற 'டைம்' பத்திரிகையால் சிறந்த மனிதராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் காந்தி.
- முதன்முதலில் காந்தியை 'மகாத்மா' என்று அழைத்தவர் ரவீந்திரநாத் தாகூர். 1915ம் ஆண்டு சாந்தி நிகேதனுக்கு காந்தியடிகள் சென்று தாகூரைப் பார்த்து, 'நமஸ்தே குருதேவ்' என்று கைகூப்பி வணக்கம் சொன்னார். உடனே தாகூர், 'நான் குருதேவ் என்றால் நீங்கள் மகாத்மா' என்று சொல்லி வணங்கினார். அன்றுமுதல் அவர் மகாத்மா.
- புத்தகம் படிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்த காந்திக்கு, மிகவும் பிடித்த எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய். ரஷ்ய எழுத்தாளர் லியோ டால்ஸ்டாயுடன் காந்தி அதிக நட்புறவு கொண்டிருந்தார்.

- லண்டனில் வட்டமேஜை மாநாட்டில் பங்கேற்றுவிட்டு இந்தியா திரும்பும்போது, ரோமன் ரோலந்தை முதன்முதலாக சந்தித்தார் காந்தி. அப்போது ரோலாந்தை தனக்காக பியானோ வாசிக்கச் சொல்லி கேட்கிறார், அவரும் மகிழ்ந்து பீத்தோவனின் பிரபலமான இசைக் கோர்ப்பை வாசித்துக் காட்டினார்.
- தென் ஆப்ரிக்காவில் அவர் இருந்தபோது அங்கு உள்நாட்டுப் போர் நடந்தது. அப்போது காயமடைந்த பிரிட்டிஷ் வீரர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக, இந்தியர்களை ஒருங்கிணைத்து ஒரு தொண்டர்கள் பிரிவைத் துவக்கினார்.
- ஆங்கிலம், இந்தி, குஜராத்தி மொழிகளில் வெளிவந்த இண்டியன் ஒப்பீனியன், ஹரிஜன், யங் இண்டியா போன்ற பல பத்திரிகைகளுக்கு காந்திஜி ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.
- மகாத்மா காந்திஜியின் சுயசரிதையான ‘சத்தியசோதனை’, 1927ம் ஆண்டு வெளியானது. அது, 20ம் நூற்றாண்டின் 100 முக்கிய புத்தகங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.
- தென் ஆப்பிரிக்காவில் அவர் வெற்றிகரமான வழக்கறிஞராக பணத்தைக் குவித்தாலும் அவருக்கு மகிழ்ச்சியில்லை. காரணம், அவரின் சக இந்தியர்கள் அங்கே வறுமையில் வாடினர். பசி, பட்டினியால் துவண்டிருந்தனர். அவர்களின் துன்பத்தைப் போக்க வருமானத்தின் பெரும் பகுதியை காந்திஜி செலவிட்டார்.
- ஒரு முறை காந்தி உடுத்தியிருந்த வேட்டி கிழிந்திருந்தது. அதைப் பார்த்த ஒருவர், “பாபு! உங்கள் வேட்டி கிழிந்திருக்கிறது” என்று சொன்னார். காந்தி குளியல் அறைக்குச் சென்று, கிழிசல் வெளியே தெரியாமல் வேட்டியைத் திருப்பி உடுத்திக் கொண்டு வந்தார். “பார்! எங்கே கிழிந்திருக்கிறது? இந்த வேட்டியில் கிழிய இன்னும் நிறைய இடமிருக்கிறது” என்றார். கிழிந்த துணிகளைத் தானே தைத்துக் கொள்வார் காந்திஜி.
- காந்திக்கு உயர் ரத்த அழுத்த நோய் இருந்தது. ஆனால் அதனால் அவர் சிடுசிடுப்பாகவோ, கோபத்துடனோ நடந்து கொள்ளவில்லை. அந்த நோயைக் கட்டுக்குள் வைத்திருந்தார்.
- டெல்லியிலுள்ள காந்தி மியூசியத்தில் காந்தியின் இதய ஒலியைப் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். காந்தியின் இதயம் துடிப்பதைப் பார்வையாளர்கள் அங்கு கேட்க முடியும்.
- காந்திஜி மறைந்த அன்று அவரது நினைவைப் போற்றும் வகையில் இலங்கை வானொலி நிலையம் 24 மணி நேரத்திற்கு எந்த நிகழ்ச்சியையும் ஒலிபரப்பவில்லை. முழுமையாக மௌன அஞ்சலி செலுத்தியது.
- 1948ம் ஆண்டு காந்திஜியின் உடலைச் சுமந்து சென்ற அதே பீரங்கி வண்டி, 1997ல் அன்னை தெரசா உடலையும் சுமந்து சென்றது.



# காந்திய சிந்தனைகள்!

- ❖ நம்மை அறிமுகப்படுத்துபவை நம் வார்த்தைகள் அல்ல, நம் வாழ்க்கையே!
- ❖ இரவு படுக்கச் செல்லும் முன்பு கோபத்தைக் கைவிட வேண்டும்.
- ❖ கோபமும் சகிப்புத்தன்மையின்மையும் சரியான புரிதலின் எதிரிகள்.
- ❖ நாளை மரணிப்போம் என்பதை போல வாழுங்கள்; தனக்கு மரணமே இல்லை என்பதைப் போல நினைத்துப் படியுங்கள்.
- ❖ ஒவ்வொருவரும் அமைதியை அவர்களுக்குள்தான் காண வேண்டும். அந்த அமைதி உண்மையானதாகவும் வெளிப்புறச் சூழல்களால் பாதிக்கப்படாததாகவும் இருக்க வேண்டும்.
- ❖ சுயமரியாதை இருக்கும் இடத்தில் எந்தவித பரிசீலனைக்கும் இடமில்லை.
- ❖ எல்லா விதத்திலும் ஒத்துப்போவது நட்பல்ல. இருவருக்கிடையே கருத்து மோதல் ஏற்படும் போதிலும் அதை தாங்கிக் கொள்வதுதான் உண்மையான நட்பு.
- ❖ நண்பர்களைப் பற்றி பெருமையாக நிறையப் பேசுங்கள். பிடிக்காதவர்களைப் பற்றி எந்த இடத்திலும் எதுவும் பேசாதீர்கள்.
- ❖ நட்பு என்பது உடன்படிக்கை அல்ல. பிரதிபலனாக எதையும் எதிர்பார்க்காத ஓர் உறவே நட்பு.
- ❖ நல்ல குடும்பத்தைப் போல பள்ளிக்கூடம் வேறில்லை, ஒழுக்கம் மிக்க பெற்றோர்களைப் போல வேறு ஆசிரியர்களும் இல்லை.
- ❖ மிருகங்களை போல் நடந்து கொள்பவன், சுதந்திர மனிதனாக இருக்க முடியாது.

- இந்த உலகில் எல்லா மனிதர்களுக்கும் போதுமான அளவுக்கு வளம் உள்ளது. ஆனால் ஒருவனின் பேராசை அளவுக்கு வளங்கள் இங்கில்லை.
- உண்மையான செல்வம், நல்ல உடல்நலம்தான். அது தங்கம், வெள்ளி அல்ல.
- சுயமரியாதை கொண்ட மனிதனின் காலில் தங்கத்தால் போடப்பட்ட கால் விலங்கையும் அவன் இரும்பு விலங்காகத்தான் நினைப்பான். தங்கத்தில் இருந்தாலும், இரும்பில் இருந்தாலும், விலங்கு விலங்குதானே!
- நீங்கள் என்ன சிந்திக்கிறீர்களோ, என்ன சொல்கிறீர்களோ, என்ன செய்கிறீர்களோ அவற்றை எல்லாம் ஒருங்கிணைக்கும்போதுதான் மகிழ்ச்சி கிடைக்கிறது.
- நம் பேச்சாலோ அல்லது எழுத்தாலோ பிறரை நம் வசம் இழுக்க வேண்டும் என்ற தேவையில்லை. நம் வாழ்வின் மூலம்தான் அதை அடைய முடியும். பிறர் எளிதாகப் படிக்கும் வகையில் நம் வாழ்க்கை திறந்த புத்தகமாக இருந்தால் அது எளிதாகும்.
- மனித குலத்தை அன்பு என்ற விதிதான் ஆள்கிறது. வெறுப்பு போன்ற வன்முறை போன்றவை நம்மை ஆண்டால், நாம் காட்டுமிராண்டிகளாகி விடுகிறோம். எனினும், இந்தச் சோகம், இந்த நாகரிக உலகத்திலும் தொடரத்தான் செய்கிறது.
- எங்கே அன்பு இருக்கிறதோ, அங்கே வாழ்க்கை இருக்கிறது.
- அன்பு செலுத்துவதன் ஒரே தண்டனை, கஷ்டத்தை அனுபவிப்பதுதான்.
- அன்பு கொடுக்கும் நீதி, சரணடைவது போன்றது. சட்டம் மூலம் பெறும் நீதி, தண்டனை பெறுவது போன்றது.
- இந்தியர்கள் வாழ்வில் என்னைப் பின்பற்றக்கூடும். என் மரணத்திற்குப் பின் என்னைக் கொண்டாடக்கூடும். ஆனால் அவர்கள் ஒரு போதும் என் வாழ்வின் நோக்கங்களை அவர்களுடையதாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.
- மகிழ்ச்சி என்பது பெறுவதில் இல்லை, கொடுப்பதில்தான் இருக்கிறது.
- மகிழ்ச்சி உன் எண்ணத்தில் இருக்கிறது, உன் வார்த்தையில் இருக்கிறது. நீ செய்யும் நல்லிணக்கத்தில் இருக்கிறது.
- கண் பார்வை அற்றவர் குருடர் அல்ல. தன் குற்றம் குறையை உணராமல் எவர் இருக்கிறாரோ அவரே உண்மையான குருடர்.
- நல்ல இருளுக்குப் பிறகே ஒளி பிரகாசிக்கிறது. துக்கத்தை அனுபவித்த பிறகே சுகம் தெரிகிறது.
- பிறரைத் தாழ்த்துபவன் தானும் தாழ்ந்து போவான் என்பது இயற்கையின் தர்மம்.
- தியாகம்தான் வாழ்க்கை. அது இயற்கை நமக்குக் கற்றுத் தரும் பாடம்.
- எவன் ஒருவன் தனக்குத்தானே மனக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்கிறானோ, அவனே சுதந்திர மனிதனாவான்.



# மகாத்மாவின் மகத்தான உரையாடல்!

காந்தி ஒற்றை வார்த்தை சொன்னாலும், அதை மந்திரமாக ஏற்று மக்கள் பின்பற்றினார்கள். தன் பேச்சால் இந்தியாவையே கட்டிப் போட்ட காந்தி, இளம் வயதில் கூச்ச சுபாவத்துடன் பேசவே தயங்கும் இளைஞராக இருந்தார் என்பது ஆச்சரியம்.

லண்டன் பல்கலைக்கழகத்தில் படித்து அவர் அட்டர்னி ஆனார். முதல் வழக்குக்காக நீதிமன்றத்தில் வாதாடும்போது, அவர் கால்கள் நடுங்கின. நாக்கு குழறியது. என்ன பேசுவது என்று தெரியாமல் குழம்பிய அவர், அப்படியே கீழே உட்கார்ந்துவிட்டார். ஆனால் தென் ஆப்ரிக்கா சென்றபிறகு அவர் வெற்றிகரமான வழக்கறிஞராக மாறினார். அங்கு அவர் வாதாடிய 70 வழக்குகளில் ஒன்றில் மட்டுமே தோற்றார். பேச்சின் முக்கியத்துவம் பற்றி காந்தி இப்படிக் குறிப்பிடுகிறார். 'உண்மையை அறிந்தோ அறியாமலோ, மிகைப்படுத்தியும் மறைத்தும் திரித்தும் கூறுவது, மனிதனுக்கு இயற்கையாகவே இருக்கும் ஒரு குறைபாடு. அதிலிருந்து தப்புவதற்கு மௌனம் அவசியமானது. குறைவாகப் பேசுபவர், யோசிக்காமல் பேச வாய்ப்பு இருக்காது. ஒவ்வொரு சொல்லையும் அவர் நிறுத்தியே பேசுவார். பேச வேண்டும் என்று பெருத்த ஆசையுடன் இருப்போர் பலரைப் பார்க்கிறோம். மணிக்கணக்கில் இவர்கள் பேசிக்கொண்டே போகிறார்கள். இத்தகைய பேச்சுக்களால் உலகத்துக்கு என்ன ஆதாயம்? உண்மையில் எனக்கு இருந்த கூச்சமே, எனக்குக் கேடயமாகவும், கவசமாகவும் ஆயிற்று. நான் வளர்ச்சியடைய அது அனுமதித்தது. அளந்து பேச அது உதவியது' என்கிறார் காந்தி.

கூச்ச சுபாவமுள்ள, வசீகரிக்கும் தோற்றமில்லாத, அருவி போல கொட்டும் மொழிநடையில் பேசத் தெரியாத காந்தியை மக்கள் கொண்டாடியது அவரின் இயல்புக்காகத்தான். அவரது பேச்சில் ஒரு சிநேகத்தன்மை இருந்தது. நெருங்கிய நண்பர்கள் ஒன்றிரண்டு பேருடன்

இயல்பாக உரையாடுவது போன்ற தொனியில் அவர் பேசினார். அதில் தேவையற்ற ஒப்பனைகள் இருக்காது, ஏற்ற இறக்கங்கள் இருக்காது. மகுடிக்குக் கட்டுப்படும் பாம்பு போல அந்தப் பேச்சுக்கு மக்கள் மயங்கினார்கள்.



காந்தியின் பணி மிகுந்த சவாலானது. தமிழகம் தொடங்கி காஷ்மீர் வரை, மேற்கில் குஜராத் தொடங்கி, கிழக்கில் வங்காளம் வரை இந்தியா முழுக்க பல்வேறு மொழி பேசும் மக்கள் இருக்கிறார்கள். அவர்களின் மொழியில் பேசும் அளவுக்கு இந்தியாவின் எல்லா மொழிகளையும் அறிந்த தலைவர்கள் யாரும் கிடையாது. வெவ்வேறு மதங்களால், வெவ்வேறு ஜாதிகளால் மக்கள் பிரிந்து கிடந்தார்கள். இவர்களை ஒன்றிணைத்து விடுதலைப் போரை நடத்துவது சாதாரண விஷயம் இல்லை. அதை காந்தி செய்தார். எளிமையான இந்தியில் அவர் பேசுவார். அந்த மொழியே புரியாத மக்கள் அமைதியாக அமர்ந்து கேட்பார்கள். ஒரிசாவில் ஒரு கடற்கரைக் கூட்டத்தில் ஆயிரக்கணக்கான பழங்குடி மக்கள் அவர் கூட்டத்துக்கு வந்து அமர்ந்து அமைதியாக கவனித்ததை வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். அவர்கள் யாருக்கும் காந்தி என்ன பேசினார் என்பது புரியவில்லை. ஆனால், காந்தி தங்கள் மத்தியில் பேசுகிறார் என்பதே போதுமானதாக இருந்தது.

அவர் அகிம்சையை, சத்தியத்தை, விடுதலையை, ஒன்றிணைந்து இருப்பதை வலியுறுத்துவார் என்பது எல்லோருக்கும் தெரியும். உண்மையில் காந்தியின் பல கூட்டங்களில் மைக்கே இருக்காது. அவர் பேசுவது, முன்வரிசையில் உட்கார்ந்திருக்கும் சிலரைத் தவிர வேறு யாருக்கும் கேட்காது. என்றாலும், வேட்டி அணிந்த அந்த எளிய உருவத்தை தரிசித்தபடி மக்கள் அமர்ந்திருப்பார்கள்.

படித்த மேதைகள் முதல் எளிய படிப்பறிவில்லா பாமரர்கள் வரை எல்லோரையும் காந்தி தன் பேச்சால் கட்டிப் போட்டார். இத்தனைக்கும் அவர், எல்லோருக்கும் சுகம் தரும் விஷயங்களைப் பேசவில்லை. பிரிட்டிஷார் கொடுத்த வேலைகளை விடச் சொன்னார், அந்நியத் துணிகளை எரிக்கச் சொன்னார், போராட்டத்தில் கலந்துகொண்டு கஷ்டப்படச் சொன்னார். ஆனால், காந்தி சொன்னார் என்பதற்காக எல்லோரும் கேட்டார்கள்.

ஒருவர் எப்படிப்பட்ட இயல்பிலிருந்து பேசுகிறார் என்பதைப் பொறுத்தே, அவர் சொல்லும் வார்த்தைகளுக்கு மதிப்பு இருக்கும். மகாத்மா அதை நமக்கு உணர்த்துகிறார்.



# உலகம் கொண்டாடிய காந்தி!


உலகம் முழுக்க நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் நமது தேசத் தந்தை மகாத்மா காந்திக்கு அஞ்சல் தலைகளை வெளியிட்டு அவரை கௌரவப்படுத்தியுள்ளன. உலகில் எந்த நாட்டுத் தலைவருக்கும் கிடைக்காத பெருமை இது. உலக நாடுகளில் காந்திஜிக்கு வெளியிடப்பட்ட அஞ்சல் தலைகளின் எண்ணிக்கை சுமார் 300.

- இந்தியாவில் காந்திஜிக்கு முதல் அஞ்சல் தலை அவரது 80வது பிறந்த நாள் அன்று வெளியிடப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு 4 தபால் தலைகளுக்கான வடிவமைப்புப் பணிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. துரதிர்ஷ்டவசமாக தனது 80வது பிறந்த நாளுக்கு 8 மாதங்களுக்கு முன்பே காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது 80வது பிறந்த நாளில் வெளியிட முடிவு செய்யப்பட்ட தபால் தலைகள், அவரது நினைவாக ஆகஸ்ட் 15, 1948ல் முதல் சுதந்திர தினத்தில் வெளியிடப்பட்டு தேசத்தந்தை கௌரவிக்கப்பட்டார்.
- சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக இருந்தவர் ராஜாஜி. அவர் தனது அதிகாரபூர்வமான தேவைகளுக்கு காந்திஜியின் அஞ்சல் தலைகளைப் பயன்படுத்த விருப்பம் தெரிவித்தார். எனவே, அரசு தேவைகளுக்காக உபயோகப்படுத்தப்படும் அஞ்சல் தலைகளில் (Service) சேவை என்று அச்சிடப்பட்டு பயன்படுத்தப்பட்டது. அந்த அஞ்சல் தலைகளில் ரூபாய் 10 மதிப்பு கொண்ட (Service) சேவை முத்திரை இடப்பட்ட 100 அஞ்சல் தலைகளே அச்சிடப்பட்டன. இதுதான் இந்தியாவின் மிகவும் அரிதான அஞ்சல் தலையாக இன்று வரை ஆட்சி செய்து கொண்டிருக்கிறது.
- காந்திஜிக்கு முதன்முதலில் அஞ்சல் தலை வெளியிட்ட வெளிநாடு, அமெரிக்கா. 1961ம் ஆண்டு ஜனவரி 26 அன்று இரண்டு தபால் தலைகளை வெளியிட்டு கௌரவப்படுத்தியது. இரண்டாவதாக காங்கோ 1967ம் ஆண்டு வெளியிட்டது.

❖ எந்த பிரிட்டனை எதிர்த்து அவர் போராடினாரோ, அந்நாடு அவர் இறந்து 21 ஆண்டுகள் கழித்து அவருக்கு அஞ்சல் தலை வெளியிட்டது. 1969ம் ஆண்டு காந்திஜியின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின் நினைவாக பிரிட்டன் உட்பட நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகள் அஞ்சல் தலை வெளியிட்டு மகாத்மாவை கௌரவப்படுத்தின.

❖ காந்திஜி நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின் நினைவாக, பூடான் மற்றும் சோமாலியா நாடுகள் வெளியிட்ட ஐந்து அஞ்சல் தலைகளும் இந்தியாவின் நாசிக் பாதுகாப்பு அச்சகத்தில் அச்சிடப்பட்டவை ஆகும்.




❖ சுதேசியாகவே வாழ்ந்து மறைந்த மகாத்மாவின் உருவம் இடம்பெற்ற இந்தியாவின் முதல் அஞ்சல் தலை சுவிட்சர்லாந்தில் அச்சடிக்கப்பட்டது என்பதுதான் ஆச்சரியம். இன்று வரை வெளிநாட்டில் அச்சிடப்பட்ட ஒரே இந்திய அஞ்சல் தலை காந்திஜியின் அஞ்சல் தலைதான். அதன்பிறகுதான் நாசிக் நகரில் அஞ்சல் தலை மற்றும் ரூபாய் நோட்டுகள் அச்சிட அச்சகம் நிறுவப்பட்டது.

❖ காந்திஜிக்கு முதன்முதலில் அஞ்சல் அட்டை (Post card) வெளியிட்ட வெளிநாடு போலந்து.

❖ காந்திஜிக்கு முதன்முதலில் நினைவுஉறை (Commemorative envelope) வெளியிட்ட இந்தியா அல்லாத முதல் வெளிநாடு ருமேனியா.

❖ காந்திஜிக்கு முதன்முதலில் அஞ்சல் அட்டை வெளியிட்ட வெளிநாடு மியான்மர். அதையடுத்து, செக்கோஸ்லோவாக்கியா மற்றும் லக்சம்பர்க் நாடுகள் அஞ்சல் முத்திரை (Post mark) வெளியிட்டு கௌரவப்படுத்தின.

❖ காந்திஜியின் பிறந்த நாளான அக்டோபர் 2ம் தேதியை ஐக்கிய நாடுகள் பொதுச்சபை சர்வதேச அகிம்சை தினமாக அறிவித்து காந்திஜிக்கு மகுடம் சூட்டியது. மேலும் 2009 அக்டோபர் 2 அன்று அஞ்சல் தலையையும் வெளியிட்டு கௌரவப்படுத்தியது.

❖ இந்தியா இதுவரை 48க்கும் மேற்பட்ட காந்திஜி அஞ்சல் தலைகளும் 200க்கும் மேற்பட்ட சிறப்பு முத்திரைகளைக் கொண்ட தபால் உறைகளையும் மற்றும் அஞ்சல் அட்டைகளும் வெளியிட்டு தேசத்தந்தை கௌரவப்படுத்தப்பட்டுள்ளார்.



# உடை சமத்துவம் கண்ட காந்தி!

வெறும் நூலால் மட்டும் ஒரு நாட்டின் உடைகள் நெய்யப்படுவதில்லை. அந்த நிலப்பரப்பின் பொருளாதாரம், தட்பவெப்பநிலை, அந்தச் சமூகத்தின் பண்பாடு என பல விஷயங்களை ஆதரமாகக் கொண்டு ஆடைகள் உருவாகின்றன. எலும்பை உறைய வைக்கும் குளிர் இருக்கிற அன்டார்க்டிகா கண்டத்தில் மெல்லிய உடை உடுத்துவது பொருத்தமற்றது. அங்கு உடலுக்கு கதகதப்பைத் தருகிற ஆடைகள் வடிவமைக்கப்படுகின்றன. 100 டிகிரி ஃபாரன்ஹீட் வெயில் அடிக்கிற நம் நாட்டில், கோட் சூட் போட்டுக் கொள்வதுதான் பொருத்தமற்றது.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில், ஆங்கிலேயர்கள் அவர்கள் நாட்டுக்கு ஏற்ற உடையையே இந்தியாவிலும் அணிந்தனர். இதற்கு ஒரே காரணம்தான் உண்டு. தன் உடையின் மூலமாக 'தான் ஒரு இந்தியனுக்கு மேலானவன்' என்பதை ஒவ்வொரு நிமிடமும் உணர்த்தினார்கள். அதிக விலை கொடுத்து நம் மக்களையும் அந்த மாதிரி உடைகளை வாங்கி உடுத்தச் செய்தனர். கதர் அடிமையின் சின்னமாகவும், வெள்ளையர்களின் உடை நாகரிகத்தின் அடையாளமாகவும் நம்பப்பட்டது. இங்கிலாந்திலிருந்து ஆடை இறக்குமதி நூறு சதவிகிதத்துக்கு மேல் அதிகரித்தது. கோடிக்கணக்கான ஏழை நெசவாளர்களின் வாழ்க்கையையே கேள்விக்குறியாக்கும் மோசடியை ஆங்கிலேயர்கள் செய்வதை உணர்ந்து 'கதராடை இயக்கம்' தொடங்கினார் காந்தி.

அடிமைத்தனத்திலிருந்து இந்தியாவை மீட்டெடுக்க வலுவான ஓர் ஆயுதம் தேவைப்பட்டது. அது அனைத்து மக்களையும், கிராமங்களையும் இணைக்கிற ஆயுதமாக இருக்க வேண்டும். 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது; சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்' என்று இந்தியாவின் கடைக்கோடி மனிதர் வரை கதர் ஆடையின் மூலம் ஒன்று திரட்டப்பட்டனர். காந்தியின் அறப் போராட்டத்தில் உடையின் பங்களிப்பு மிகப்பெரியது.



காந்தியடிகள் 'கதர்' என்கிற ஆயுதத்தை தான் மட்டும் ஏந்தவில்லை. லட்சக்கணக்காணவர்களை ஏந்த வைத்தார். ஒரு நெசவாளரின் குடிசையில் சுற்றப்படும் கைத்தறி ராட்டையின் சக்கரம், சுதந்திர வேட்கை என்னும் தேரின் சக்கரமானது. 'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்' என்பதுபோல, கதராடையை அனைவரையும் உடுத்தச் செய்வதன் மூலம், சுதந்திர உணர்வை ஊட்டி, வேலைவாய்ப்பின்றி கஷ்டத்தில் இருக்கும் நம் இந்திய நெசவாளர்களின் வாழ்விலும் மறுமலர்ச்சி ஏற்படுத்தினார்.

எளிய இந்திய நெசவாளர்கள் நூல் நூற்கும்போது சுழலும் கைராட்டையின் ஒவ்வொரு சக்கரமும், பெரும் பீரங்கிகளும் துப்பாக்கிகளும் கொண்டு நம்மை ஆண்ட பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை எதிர்த்துச் சுழன்றது. 'ஆங்கிலேயரின் ஆடைகளே உயர்ந்தது' என்கிற எண்ணத்தை உருவாக்கி, மன ரீதியிலும் நம்மை அடிமைப்படுத்தியவர்களை, நம் பாரம்பரிய கதர் ஆடைகளைக் கொண்டே எதிர்த்தார் காந்தியடிகள்.

உடைகள் மானம் சார்ந்தவை. அவற்றில் கோர்த்திருப்பது வெறும் நூல் அல்ல, நம் சுயமரியாதையும்தான்! கதரில் தொடங்கி உப்பு சத்தியாக்கிரகம் வரை, 'நம் பாரம்பரியமே நமது பெருமை' என்று அனைவருக்கும் உணர்த்தினார் காந்தி. கதர் இயக்கத்தின் மூலம் காந்தியடிகள் மக்களின் சுயமரியாதையை மட்டும் தட்டி எழுப்பவில்லை. 'இனி இதை வைத்து எந்தப் பயனும் இல்லை' என்று நெசவாளர்கள் தங்கள் வீட்டு பரண்களில் தூக்கியெறிந்த நூல் நூற்கும் ராட்டையை மீண்டும் சுழல விட்டதன் மூலம், அவர்களின் வீட்டில் அடுப்பு எரிகிற பொருளாதார மாற்றத்தையும் காந்தியடிகள் உருவாக்கினார்.

உடையின் மூலம் ஆங்கிலேயர்கள் புகுத்திய ஏற்றத் தாழ்வையும் காந்தியின் காதி இயக்கம் ஒழித்தது. பணக்காரர்கள் முதல் ஏழை வரை அனைவரும் உடுத்துகிற உடையாக கதர் மாறியது. வெள்ளையர்களின் வண்ணமயமான ஆடைகளின் பளபளப்பை, வெண்மை நிற கதரின் உண்மையும் சத்தியமும் ஜெயித்துக் காட்டின. நம் பாரம்பரிய உடையான வேட்டிகளை அணியும்போது, இந்தப் பெருமித வரலாற்றை நாம் உணர்கிறோம்.



# பாரம்பரியத்தின் பெருமை!

மனிதர்களின் அடிப்படைத் தேவைகளாக உணவும், உடையும் வரையறை செய்யப்பட்டுள்ளன. உணவு இல்லாமல் கூட ஓரிரு வேளைகள் இருந்து விடலாம். ஆனால் மானம் காக்கும் உடை அத்தியாவசியம்.

தென்னையிலும், பனையிலும் நார் எடுத்து பெட்டிகளையும் வலைகளையும் செய்யக் கற்றுக் கொண்ட நம் நாட்டினர், அதன் தொடர்ச்சியாக பருத்தியிலிருந்து பஞ்சைப் பிரித்தெடுக்கவும், அந்தப் பஞ்சிலிருந்து நூல் நூற்கவும் கற்றார்கள். ஆடை நாகரிகத்தில் மாபெரும் புரட்சியான இது, இந்தியாவில்தான் நிகழ்ந்தது என்பது நமக்கெல்லாம் பெருமை. வெகு விரைவிலேயே நுண்மையும் மென்மையும் மிக்க மேன்மையான பருத்தி ஆடைகள் நெய்வதை நம் மக்கள் கற்றறிந்தார்கள். நெய்யப்பட்ட இழைகளின் வரிசை தெரியாதபடி அவ்வளவு கச்சிதமாக ஆடைகள் இருந்தன என புலவர்கள் இவற்றைப் புகழ்ந்து பாடியிருக்கிறார்கள்.

வெடித்துச் சிரித்த பருத்தியிலிருந்து தூய வெண்மையில் ஆடை நெய்து ஆண்கள் அணிந்தனர். கீழே வேட்டியும், மேலே மெய்ப்பை எனும் சட்டையும் ஆண்களின் ஆடை. இதோடு, ஆடைகளுக்கு இயற்கை வண்ணங்கள் சேர்க்கும் கலையும் அறிந்திருந்தனர் நம் முன்னோர்கள். நீலம், சிவப்பு ஆகிய வண்ணங்களில் பெண்கள் அணியும் புடவை உள்ளிட்ட ஆடைகள் உருவாக்கப்பட்டன. இந்த வண்ணங்களில் அழகிய பூ வேலைப்பாடுகள் செய்து, ஆடைகளை மதிப்புமிக்கதாக மாற்றினர்.

ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்து சமவெளி நாகரிக நகரமான மொகஞ்சதாரோவை அகழ்வாராய்ச்சி செய்தபோது, அங்கு வாழ்ந்த இந்தியர்கள் பருத்தி நெசவு செய்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

இன்று உலகத்துக்கே புதிய நாகரிகத்தை, புதிய ஃபேஷனை அறிமுகம் செய்பவர்களாக மேற்கத்திய நாடுகள் இருக்கலாம். ஆனால் நாம்

பருத்தியில் மென்மையான ஆடைகளை நெய்து, தூய்மையாக அணிந்து வலம் வந்த காலத்தில் அவர்கள் கம்பளியில் எதையோ கோர்த்து அணிந்து கொண்டிருந்தார்கள்.

இந்தியாவை ஆக்கிரமிக்க வந்த வெள்ளையர்களின் கிழக்கிந்தியக் கம்பெனி, தென்னிந்தியாவிலிருந்து பருத்தி ஆடைகளை வாங்கி பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்ய ஆரம்பித்தது. அடிக்கடி துவைக்க முடியாத கம்பளி ஆடைகளை அதுவரை அணிந்துவந்த வெள்ளைக்காரர்கள், இந்தியப் பருத்தி ஆடைகளுக்கு உடனே மாறினார்கள். எளிதில் துவைத்து தூய்மையாக உடுத்திக் கொள்ள முடியும் என்பது பருத்தி ஆடைகளின் சிறப்பு. இந்தியப் பருத்தி ஆடைகள் தரமாகவும் இருந்தன; விலை மலிவாகவும் இருந்தன. நாளடைவில் இந்தியப் பருத்தி ஆடைகளே, பிரிட்டன் முழுக்க மக்களால் விரும்பப்படும் உடையாக இருந்தது. பிரிட்டிஷ் தயாரிப்புகளை வாங்க ஆளில்லை. இப்படி தங்கள் மார்க்கெட்டை இந்திய ஆடைகள் ஆக்கிரமித்தது கண்டு பயந்துபோன பிரிட்டிஷ் அரசு, 1721ம் ஆண்டு ஒரு சட்டம் போட்டு இந்திய ஆடைகளைத் தடை செய்தது.

நாம் அடைந்த சுதந்திரத்துக்கும் நம் ஆடைகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. உலகத்துக்கே பருத்தி ஆடைகளைக் கொடுத்த நாம், வெளிநாடுகளிலிருந்து அதை இறக்குமதி செய்து அணியும் அவல நிலைக்கு ஆளானோம். இதை மாற்றியதுதான் மகாத்மா காந்தியின் கதர் இயக்கத்தின் சாதனை! நம்மை சுதேசியாக இருக்கச் சொன்னார் காந்தி. அந்நியத் துணிகளை புறக்கணிக்கச் சொன்னார். அதைச் செய்தே நாம் சுதந்திரம் அடைந்தோம். "கைத்தறி, ஒரு கண்ணியமான சிறுதொழிலாக இங்கு காலம் காலமாக இருந்து வருகிறது. இந்தியாவின் லட்சக்கணக்கான ஏழைகள் பட்டினியில் தவிக்காமல் இருக்க வேண்டும் என்றால், நாம் நமது நெசவாளர்களைச் சார்ந்திருக்க வேண்டும்'' என்று காந்தி சொன்னார். வேட்டி அணியும் ஒவ்வொருவரும் காந்தியின் இந்தக் கனவை நனவாக்க உதவுகிறார்கள்.





# வேட்டியின் பெருமை!

உலகிலேயே பல்லாயிரம் ஆண்டுகளாக வடிவம் மாறாமல், அளவு மாறாமல், மக்களால் தொடர்ச்சியாக அணியப்பட்டு வரும் ஒரே ஆடை என்ற பெருமை, நம் பாரம்பரிய உடையான வேட்டிக்கு மட்டும்தான் உண்டு. மானம் காத்ததுடன் மண்ணின் மணத்தை மாண்புற மலரச் செய்ததும் இந்த வேட்டிதான்.

வேட்டியை விட நம் சுற்றுச்சூழலுக்கு நன்மை செய்யும் உடை வேறெதுவும் இல்லை. பறித்த பருத்தியில் இருக்கும் அதே வெண்மை நிறத்தில் தயாராகிறது வேட்டி. சாயம் சேர்க்க வேண்டிய அவசியமில்லை. அதனால் சாயத்தில் உள்ள வேதிப்பொருட்கள் இந்த மண்ணில் கலப்பதில்லை. சாயமிடும் பணிக்காக நல்ல தண்ணீரைப் பயன்படுத்தி, தண்ணீர்த் தட்டுப்பாட்டையும் வேட்டிகள் ஏற்படுத்துவதில்லை. எந்த நதியையும் வேட்டிகள் மாசுபடுத்துவதில்லை.

வேட்டி என்பது ஒரு நீளமான துணி என்பதைத் தாண்டி, வேறு வெட்டுதல், ஒட்டுதல் வேலைகள் செய்ய வேண்டிய அவசியமில்லை. பிற ஆடைகள் தயாரிப்பில் வெட்டுதல், தைத்தல் போன்ற நடைமுறைகளில், தேவையில்லாதவை என வெட்டி வீசப்படும் துணி நிறைய குப்பையாக சேரும். ஆனால் வேட்டி இப்படிப்பட்ட துணிக் குப்பைகளையும் உருவாக்குவதில்லை. குறைந்த அளவு எந்திரங்களே வேட்டி தயாரிப்பில் பயன்படுத்துவதால், மின்சாரத்தை அதிகமாக உறிஞ்சி, சூழலை மறைமுகமாக மாசுபடுத்துவதில்லை

இவற்றையெல்லாம் தாண்டிய இன்னொரு பெருமையும் வேட்டிக்கு உண்டு. மற்ற உடைகளைப் பொறுத்தவரை, அணிபவர் சற்றே குண்டாகி, இடுப்பளவு பெருத்துப்போனால் அவ்வளவுதான்... தூக்கி எறிவதைத் தவிர வேறு வழியில்லை. இதேபோல வளரும் பிள்ளைகளின் உயரம் கூடினாலும், மற்ற ஆடைகள் சிறியதாகிவிடும். சைஸ் குறைவாக ஆகிவிடும்

அவற்றை தூக்கித்தான் போட வேண்டும். ஆனால் வேட்டியில் இந்த இடுப்பளவு சிக்கலோ, உயரப் பிரச்னையோ இல்லை. பூரிப்பில் உடல் பெருத்தால், வேட்டியை இறுக்கம் தளர்த்திக் கட்டலாம்; உயரம் தேவை என்றால், இடுப்பில் ஒரு சுற்று குறைத்துக் கொள்ளலாம்.

படைத்த கடவுளுக்கும் உடை கட்டி அழகு பார்க்கும் பக்குவம் பெற்றவர்கள் நாம். நாம் அணியும் அதே வேட்டிதான் கடவுள்களின் உடை. வேட்டி அணியும்போது, ‘கடவுள் அணியும் உடையை நாமும் அணிந்திருக்கிறோம்’ என்ற பெருமித உணர்வு உள்ளத்தில் பொங்குகிறது.

இன்றைய நவீன நாகரிகச் சூழலில் பெரும்பாலான மக்களிடமிருந்து விலகிச் சென்றுவிட்ட வேட்டியை, மீண்டும் ‘மதிப்பிற்குரியவர்களின்’ கம்பீர அடையாளமாக மாற்றிய பெருமை ‘ராம்ராஜ் காட்டன்’ நிறுவனத்துக்கு உண்டு. வேட்டியைக் கண்டுபிடித்தது பெயர் தெரியாத யாரோவாக இருக்கலாம். ஆனால், அதில் வித்தியாசம் காட்டி வெற்றி பெறச் செய்தது ராம்ராஜ் காட்டன் நிறுவனம்தான்.

பண்டிகைகள் மற்றும் விசேஷங்களுக்கான பாரம்பரிய வேட்டிகள், கோயிலுக்குச் செல்லும்போது அணியும் டெம்பிள் வேட்டிகள், திருமணத்திற்கான பட்டு வேட்டிகள், அலுவலகத்திற்கு அணிந்து செல்ல ஃபார்மல் வேட்டிகள், விழாக்களுக்கு அணிய பிரத்யேக வேட்டிகள், இரவு நேரத்தில் உடுத்தும் வேட்டிகள், வைபவ வேட்டிகள், கறை படியாத வேட்டிகள், குழந்தைகளுக்கான வேட்டிகள் என வேட்டியில் அத்தனை வெரைட்டியும் ராம்ராஜ் காட்டனில் உண்டு. இன்றைய இளம் தலைமுறைக்காக ‘ஜெனெக்ஸ்ட் வெல்க்ரோ பாக்கெட் வேட்டி’யும் அறிமுகம் ஆகியுள்ளது. இனி வேட்டியைக் கட்ட வேண்டியதில்லை; ஒட்டிக்கொள்ளலாம்.



இன்று குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை நம் பாரம்பரிய உடையான வேட்டியை பெருமிதத்தோடு அணிகிறார்கள். பாரம்பரிய கொண்டாட்டத்தின் ஓர் அடையாளமாகவே இன்று வேட்டியை ராம்ராஜ் காட்டன் மாற்றியிருக்கிறது. வேட்டி அணிவது மதிப்புமிக்க அடையாளம் என்பதை நாம் உணர்வோம்; மற்றவர்களுக்கும் உணர்த்துவோம்!



வெண்மையின் ஆடை
நம்மவர் வேட்டி
விடுதலை ஆடை
தென்னவர் வேட்டி

பாட்டன் கட்டிய
பரம்பரை வேட்டி
பழைய தமிழரின்
பண்பாடு வேட்டி

தும்பைப் பூவின்
தூய்நிறம் வேட்டி
நம்பி உடுத்தும்
நல்லுடை வேட்டி


அப்பன் இடுப்பை
ஆண்டது வேட்டி
வெப்ப நிலைக்கு
ஏற்றது வேட்டி

கணிப்பொறித் தலைமுறை
கட்டும் வேட்டி
மணப்பெண் பார்த்து
மயங்கிடும் வேட்டி

மாண்பு மிகுந்தவர்
மனங்கவர் வேட்டி
மாணவர் அணிந்து
மகிழும் வேட்டி

மரியாதை கூட்டும்
மங்கல வேட்டி
மதிப்பிற்குரியோர்க்கு
ராம்ராஜ் வேட்டி


RAMRAJ
COTTON
வேட்டி
100
22.09.1921 - 22.09.2021



மகாத்மாவின் சுதேசி பொருளாதாரம்
நெசவாளர்களின் வாழ்வாதாரம்.
வேட்டிக்கு ஆதாரம்
RAMRAJ
காட்டன்

RAMRAJ COTTON
வேட்டி 100
22.09.1921 - 22.09.2021

கடந்த 100 வருடங்களுக்கு முன்பு
இதே நாளில் மதுரை மாநகரில் முதன் முறையாக
வேட்டியை மட்டுமே தனது உடையாக்கிய மனிதநேயமிக்க
மாமனிதர் மகாத்மாவிற்கு ராம்ராஜ்–ன் சல்யூட்.



என் வாழ்க்கைப்
போக்கில் நான் செய்த
அனைத்து மாற்றங்களும்
முக்கியமான
நிகழ்வுகளால் ஏற்பட்டன;
இந்த முடிவுகள் ஆழ்ந்த
ஆலோசனைக்குப் பிறகு
எடுக்கப்பட்டவை.
அதனால் நான் வருத்தப்பட
வேண்டியதில்லை.
என்னால் அவர்களுக்கு
செய்ய முடிந்த ஒரே உதவி
நான் எடுத்த முடிவுதான்.
மதுரையில் என் உடையில்
நான் எடுத்த தீவிர மாற்றம்.

வேட்டி என் அடையாளமானது.

**– காந்தி**

RAMRAJ©
COTTON